# வாணி வா... நீ !



## அகிலா கோவிந்த்



# வாணி, வா...நீ!



அகிலா கோவிந்த்

## 1

அழகிய விழிகள் அகல விரிய மணிக்கட்டு மருதாணி விரல்களில் தலைசாய்த்து ரொம்ப நேரமாய் யோசித்துத் கொண்டிருந்தாள் வாணி.

வழக்கமாய் அலுவலகத்தில் நுழைந்து விட்டால் சீட்டில் அமர்ந்து துறுதுறுவென வேலைகளில் ஆழ்ந்து விடுவாள். இப்படி ஒன்றும் ஓடாமல் பிரமை தட்டினாற்போல் யோசிப்பது அவள் வழக்கமும் அல்ல.

காலஞ்சென்ற அவள் அன்புத்தாயார் இளம் பருவத்தில் அவளிடம் அடிக்கடி சொல்வது அவள் ஞாபகத்தில் ஓடியது. "நன்றாக யோசித்து முடிவெடு கண்மணி. நீ எடுத்தால் சரியாகத்தான் இருக்கும். அதற்காக உன் அழகான தலையைப் போட்டு ரொம்பவும் குழப்பிக் கொள்ளக்கூடாது புரிகிறதா?"

அம்மாவின் இந்த வார்த்தைகள் அவளுள் நன்றாக பதிந்து போயிற்று. உற்சாக டானிக்காய் எப்போதும் அவளுள் ஓடிற்று. அந்த உற்சாகத்தில்தான் எத்தனையோ முடிவுகளை தைரியமாய் எடுத்திருக்கிறாள்.

'அது போல்தான் இம்முறையும் இந்த முடிவை தைரியமாக எடுத்துவிட வேண்டியதுதான்' என அவள் தன் தலையை சிலுப்பிக் கொண்டபோதுதான் அவளது மை தீட்டிய விழிகளில் மறுபடியும் பாலுவின் உருவம் விரிந்தது. பத்து வயது சிறுவன் பாலு..

பச்சிளம் வயதில் பக்கத்து டீ கடையில் எடுபிடி பையனாய்.. மாஸ்டருக்கு

பயந்து நடுங்கி அவன் வேலை பார்ப்பதை பலமுறை கண்டிருக்கிறாள். அதை அப்படி நினைத்துப் பார்க்கவே அவளுக்கு பாவமாயிருக்கும். அதிலும் காலையில் நடந்த சம்பவம் அவளை அப்படியே உலுக்கிவிட்டது.

○○○

அலுவலகத்திற்காக வீட்டிலிருந்து பஸ் ஸ்டாப் நோக்கி கிளம்பிய போது வெளிச்சுவர் ஓரமாய் மறைவில் அழுதபடி பாலு நின்றிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

பதறித்தான் அவன் பக்கம் போனாள். " என்ன விஷயம்?" என்றபோது 'அக்கா..' என்றபடி விஷயத்தைச் சொன்னான் பாலு.

விஷயம் இதுதான். பக்கத்துக் கடையில் இருந்து எடுத்து வரும்போது டீ கிளாஸ் ஒன்று உடைந்து விட்டது. இது டீ மாஸ்டருக்குத் தெரிந்தால் அடி உதையோ அல்லது கொதிக்கும் சுடுநீரையோ மேல் ஊற்றும் தண்டனையோ அவனுக்குக் கிடைக்கும்.

அதை நினைத்து அஞ்சி நடுங்கி 'காப்பாத்துக்கா..' என்று அவன் கைகூப்பிய போது அப்படியே அவனை கட்டிக் கொண்டாள் வாணி.

அவனது கிழசலான பழைய உடைகளை அவள் கைகள் வருடிய போது வாணியின் கண்கள் பனித்தன. தனக்கு தம்பி ஒருவன் பிறந்திருந்தால் கிட்டத்தட்ட இவனைப்போல், இவன் வயதில்தானே இருந்திருப்பான்? என நினைத்தவள் கடவுள் இப்படி பாரபட்சமாய் சில பிஞ்சுகளை தவிக்க விட்டு விடுகிறாரே..? என நினைத்து வருந்தவும் செய்தாள்.

பின் பாலுவைத் 'தேற்றி அவன் அழுகையைத் துடைத்து, டீ கிளாஸ் உடைத்த பழியில் இருந்து அவன் தப்பிக்க அவளே ஒரு வழி செய்தாள்.

அவனை அங்கே நிற்கச் சொல்லிவிட்டு பக்கத்து டீக்கடைக்குச் சென்று தன் வீட்டிற்கு கொண்டு செல்வதாய் கூறி ஒரு டீயை வாங்கினாள்.

அதை பாலுவை குடிக்கச் சொல்ல அவன் பிடிவாதமாய் மறுத்தான். பின் அவளே அந்த டீயை குடித்து விட்டு காலி கிளாஸை அவனிடம் நீட்டினாள். "இதைக் கொண்டு போய் மாஸ்டரிடம் நீ கொண்டு வந்த கிளாஸாய் கொடுத்து விடு.. எனது டீ கிளாஸ் தொலைந்து விட்டதாய் கூறி நான் பணம் கொடுத்துவிடுகிறேன். மாஸ்டர் உன்னை அடிக்க மாட்டார். சரியா?" என சமாதானம் செய்து அனுப்பி வைத்தாள்.

"சரிக்கா.." என பாலுவும் பயம் நீங்கி தலையாட்டியபடி செல்ல.. அவன் போவதையே பாவம் பொங்கப் பார்த்தாள்.

பாலு பயப்படுவது நியாயம்தான். அந்த டீ மாஸ்டர் ரொம்ப கோபக்காரன். நிறைய சமயங்களில் பாலுவின் முதுகில், பிடறியில் வசவு வார்த்தைகளுடன் அவன் ஓங்கி அடிப்பதை கண்கூடாய்ப் பார்த்திருக்கிறாள். காலை ஐந்து மணியிலிருந்து ஓடியாடி வேலை பார்க்கும் பாலுவுக்கு பத்து மணி வாக்கில் கிடைக்கும் ஒரு பன்னும் டீயும்தான் காலை உணவு. கடையோரமாய் நின்று சுவரில் சாய்ந்தபடி அவன் பசியோடு பிய்த்து பிய்த்து சாப்பிடுவதை எத்தனையோ முறை கண்டிருக்கிறாள்.

அப்போதெல்லாம் அவள் நெஞ்சை எதுவோ ஒன்று எழுப்பி பிழியும்.





அப்படி ரொம்ப நாளாய் அவள் மனதை பிழிந்த விஷயம்தான் இன்று விஸ்வரூபமெடுத்து விட்டது. எத்தனை நாள் தான் அப்படி பாலு சித்ரவதை படுவதை பார்த்துக் கொண்டு பாவப்படுவது, பரிதாபப்படுவது..?

அப்படி அவனுக்காக பரிதாபப்பட்டால் மட்டும் போதுமா?

"என்னை.. காப்பாத்துக்கா..!" என கண்களில் நீர் மல்க அவன் கைகூப்பிய காட்சி அவள் மனதில் திரும்பத் திரும்ப வந்தது. அந்த பிஞ்சு உள்ளம் என பாடுபட்டிருக்கும்? எவ்வளவு வேதனைப்பட்டிருந்தால் இப்படி கை கூப்பி கெஞ்சுவான்? அதை பார்த்துக் கொண்டு இன்னமும் ஈவு இரக்கம் இல்லாமல் சும்மா இருப்பதா?

○○○

அதே நினைப்பில் அலுவலகம் வந்தவள் அதை தாங்க முடியாத தவிப்புடன், அழகிய விழிகள் அகல விரிய மணிக்கட்டு மருதாணி விரல்களில் தலைசாய்த்து சிந்திக்க ஆரம்பித்து விட்டாள்.

பக்கத்து சீட் லில்லி அவள் தோள்களைத் தட்டி, "யாரடி அந்த மன்மதன்?" என்ற போதுதான் உணர்வுக்கு வந்தாள்.

"மன்மதனா? என்ன உளறல்.. இது?" என்றாள்.

"பின் நாலும் அரைமணி நேரமாய் உன்னை கவனித்து வருகிறேன். பேருக்கு ஒரு ஃபைலை பிரித்து வைத்துக்கொண்டு அம்மா நனைவுகளில் எங்கோ சிறகடித்து பறந்து கொண்டிருப்பது போல் தெரிகிறதே..?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை..." என்றபடி அவள் வாயை அடைத்து ஃபைல்களில் ஆழ்ந்தாள்.

அவள் வேலை பார்ப்பது நகரின் பிரபலமான ஷிப்பிங் கம்பெனியில். துறைமுகத்தில் இறங்கும் கன்டெய்னர்கள் விபரம் முதல் வெளிநாட்டு கம்பெனிகளுக்கு தெரிவிக்க வேண்டிய தகவல் குறிப்புகளை ஈமெயில்களாக தினம் அனுப்ப வேண்டியது அவள் பொறுப்பு.

தலையை கவிழ்ந்து படபடவென ஒரு மணி நேரம் சிரத்தையாய் வேலை பார்த்தாள். அன்று தனக்கு கொடுக்கப்பட்டிருந்த அலுவல்களை முடித்தாள்.

நிமிர்ந்தபோது மனத்திரையில் மறுபடியும் பாலு நினைப்பு.

அக்கா.. காப்பாத்துக்கா..!

மறுபடியும் கை கூப்பி கெஞ்சும் பாலு தெரிந்தான்.

அவளால் இனியும் சும்மா இருக்க முடியாது.

ஏதாவது செய்தாக வேண்டும். எப்படியாவது பாலுவை காப்பாற்ற வேண்டும். அந்த டீக்கடையில் அவன் படும் சித்ரவதைகளில் இருந்து அவனை ஒரேடியாய் காப்பாற்ற வேண்டும். எப்படி?

அவளால் அது முடியுமா?

முடியுமா? என்று எண்ணும் போதே அவளுக்கு அன்னை தெரஸா ஞாபகம் வந்தது. வீட்டிலும் தாயார் படத்திற்குப் பக்கத்தில் அவள் மாட்டி வைத்திருப்பது அன்னை தெரஸாவின் படத்தைத்தான்!

எத்தனையோ, ஏழைகளை அரவணைத்து வாழ்ந்து சரித்திரம் படைத்திருக்கும்போது... ஒரே.. ஒரு சிறுவனை.. பாலுவை துன்பத்திலிருந்து

மீட்டு நம்மால் ஏன் காப்பாற்ற முடியாது? என எண்ணினாள்.

அவள் மனம் சிறிது நேரத்தில் தெளிவு பெற்றிருந்தது.

ஒருவித முடிவுடன் எழுந்தவள் மேனேஜரிடம் மதியம் அவசர வேலை இருப்பதாக சொல்லி விடுப்பு வாங்கினாள்.

அலுவலகத்தை விட்டுக் கிளம்பியவள் நேராக டீக்கடைக்குத்தான் சென்றாள்.

அங்கு அவள் நினைத்தபடியே பாலு கிழிந்த டவுசரும், அழுக்குக் கையுமாய் பால் பாத்திரங்களை கழுவிக் கொண்டிருக்க.. அவள் முகத்தைப் பார்த்ததும் அவன் முகத்தில் என்ன ஒரு மின்னல்! என்ன ஒரு சந்தோஷம்!

அக்கா..." என முகம் மலர அவன் அவள் பக்கத்தில் வர தன்னைக் கண்டதும் மலரும் அவனது பிஞ்சு முக அழகையே ஆசை தீர பார்த்தாள்.

"பாலு.." என கட்டிக்கொண்டாள்.

"என் கூட வர்றியா .. பாலு..?" என்றபோது அவன் திருதிருவென விழிக்கத்தான் செய்தான். அதற்குள் டீக்கடை நாயர் வெளியே வந்து விட்டார்.

"அம்மா... என்ன விஷயம்?" என்று கேட்ட அவரிடம் வாணி விஷயத்தை விளக்க திகைத்துப் போய் விட்டார் நாயர்.

"என்ன தத்து எடுக்கப் போகிறீர்களா? உங்க தம்பியா நினைச்சு வளர்க்கப் போறீங்களா?"

அதிசயமாய் நாயர் கேட்ட கேள்விகளுக்கு புன்னகையுடன் தலையசைத்தாள் வாணி.

நாயர் கேட்கும் பணத் தொகையை ஈடாகத் தருவதாய் சொல்ல.. பெரிய கும்பிடு போட்டார் நாயர்.

"வேண்டாம்மா... அவனைப் பார்க்க எனக்கும் பாவமாகத்தான் இருக்கும். படிக்க வேண்டிய வயசில இப்படி டீக்கடையில வேலை பார்கிறானேன்னு நானும் வருத்தப்பட்டிருக்கிறேன். ரெண்டு வருஷத்துக்கு முன்னால அனாதையாக என்னிடம் வந்தவன். நான்தான் சோறு தண்ணி போட்ட வளர்த்தேன். இப்போ நீங்க... 'உங்களால அவனுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்கும்ன்னா அதுவே எனக்கு பெரும் மகிழ்ச்சிம்மா..."

நாயர் லேசில் பாலுவை தன்னிடம் விடமாட்டார் என்று நினைத்தவளுக்கு நாயர் செய்தது பெரும் ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

அவர் மனதிலும் ஈரம் இருக்கத்தான் செய்கிறது என்பதை உணர்ந்தாள்.

பாலுவுக்குத்தான் எதுவும் புரியவில்லை. நடப்பதை உணரமுடியாமல் இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் தோளில் கை போட்டு அப்படியே அணைத்துக் கொண்டாள் வாணி. நாயரிடம் நன்றி சொல்லிவிட்டு பாலுவை தன்னுடன் அணைத்தபடியே வீடு நோக்கி நடந்தாள்.

வீட்டு வாசலில் அவளுக்காக தயாராய் காத்திருந்தாள் அத்தை கோதை நாயகி.

✪✪✪





# 2

வாணி சிறுவயதிலே பெற்றோரை இழந்து விட்டதால்... தூரத்துச் சொந்தமாய் வந்து சேர்ந்தவள் அத்தை கோதைநாயகி.

உனக்கு நான் துணை. எனக்கு நீ துணை என இருவரும் கட்டிக்கொண்டு வாழ்க்கையை தொடங்கிவிட்டனர். அவள் வரும் சமயமாய்ப் பார்த்து வாணி ஸ்காலர்ஷிப் அது இதுவென நல்லவர்களின் உதவியுடன் கல்லூரி படிப்புவரை வந்து விட்டாள்.

மேற்கொண்டு படிப்பதா? நிறுத்திவிட்டு வேலைக்குச் செல்வதா? என்று அவள் குழம்பிய வேளையில் அத்தை கோதைநாயகிதான் அவளுக்கு தைரியம் கொடுத்தாள்.

"கண்ணு, ஒரு தையல் மிஷின் மட்டும் வாங்கிக் கொடு. நான் துணிகளை தைத்து சம்பாதிக்கிறேன். உன் கல்லூரிப் படிப்பை எப்படியாவது முடித்து விடு. அப்போதுதான் நல்ல வேலை உனக்கு கிடைக்கும்..." என்றாள்.

வாணியும் அப்படியே செய்யவே கோதைநாயகி சொன்னபடியே முழுமூச்சாய் தைப்பதில் இறங்கினாள். தெரிந்தவர்கள், அக்கம், பக்கத்து வீடுகள் என வெட்கப்படாமல் ஏறி இறங்கினாள். ஆர்டர்களைப் பிடித்தாள்.

அவள் நினைத்தது போல் குடும்பத்தையும், வாணி படிப்புச் செலவையும் ஈடுகட்டும் அளவுக்கு அதன் மூலம் வருமானம் கிடைத்தது.

வாணியும் அதன்பின் கல்லூரிப் படிப்பை முடித்து ஒரு வேலை தேடிக்கொண்டாள். ஆயினும் கோதை நாயகி தைக்கும் பணியை நிறுத்தவில்லை.

வாணி பிடிவாதமாய் மறுத்துச் சொல்லியும், "நான் சும்மாதானே இருக்கிறேன் கண்ணு? ஒரு நாலு துணி தைத்துக் கொடுத்தால் நேரமும் போன மாதிரி இருக்கும். விடு.. கண்ணு..!" என கொஞ்சிக் கெஞ்சவே வேறு வழியில்லாதவளாய் வாணியும் அவள் இஷ்டத்திற்கு விட்டு விட்டாள்.

ஆனாலும் தானும் ஏதாவது சம்பாதிக்க வேண்டும் என்ற வைராக்கியமாய் தனது தடித்த உடம்பை வைத்துக்கொண்டு, மூக்குக் கண்ணாடி வழியாய் கண்களை இடுக்கிக் கொண்டு இரவு பகல் பாராமல் அவள் வேலை பார்ப்பதை பார்த்தால் வாணிக்கே சங்கடமாயிருக்கும்.

மேலும் கோதைநாயகி எதற்கும் கோபப்பட்டாள் என்ற சரித்திரமே கிடையாது. அவள் வாயிலிருந்து எப்போதும் அன்பொழுகும் வார்த்தைகளே வரும். அதிலும் அவளை வார்த்தைக்கு வார்த்தை கண்ணு என்று அழைத்தே கொஞ்சுவாள். அப்படி கண்ணு... கண்ணு... என்று அவள் அழைப்பது சிறுவயதில் பறிகொடுத்த தாயை அவளுக்கு நினைவு படுத்தி நெகிழவைக்கும்.

அதனாலே.. கோதை நாயகியை அவளுக்கு ரொம்பவும் பிடித்துப்

போயிற்று. கோதை நாயகிக்கும் தன் மீது அளவு கடந்த பாசம் வைத்திருக்கும் வாணியை ரொம்பவும் பிடித்துப் போயிற்று.

தினம் அலுவலகம் விட்டு வந்ததும் அலுவலகத்தில் நடந்த விஷயங்களை எல்லாம் வாணி ஒன்று விடாமல் சொல்வாள். அதை கதை கேட்பது போல வாய் பிளக்க கேட்டுக் கொண்டிருப்பாள் கோதை நாயகி.

கோதை நாயகிக்கும் பொது சேவை செய்வதில் மிகுந்த ஆர்வம் உண்டு. வாணி தனது சம்பளப் பணத்தை அப்படியே கொண்டு நாயகியிடம் நீட்டி விடுவாள்.

நாயகிதான் செலவுகளுக்கு போக மாதம் மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை மிச்சம் படுத்திக் கொண்ட பணத்தைச் சேர்ப்பாள். அந்தத் தொகையை கொண்டு பக்கத்து குடியிருப்பில் உள்ள ஏழைக் குழந்தைகளின் படிப்பிற்கு தங்களால் முடிந்த உதவிகளைச் செய்வது வாடிக்கை.

அதனாலேயே பாலுவை அழைத்துக்கொண்டு வாணி நுழைந்ததும் அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது. 'இவன் இனி நம் வீட்டிலே இருக்கட்டும் கண்ணு..' என நெஞ்சார அணைத்துக் கொண்டாள்.

கோதை நாயகி சொன்னதோடு மட்டுமில்லாமல் செயலிலும் இறங்கினாள். அன்று மாலை துணிக்கடைக்கு பாலுவை அழைத்துச் சென்று அவன் அளவிற்கேற்ப ரெடிமேட் துணிகளை வாங்கினாள். பக்கத்து பார்பர் ஷாப்பில் பரட்டையாய் கிடந்த அவனது முடியை அழகாக கிராப் வெட்டு வெட்டச்செய்தாள். அத்தோடு நில்லாமல் வாணியும் தன் பங்கிற்கு அடிப்படை பள்ளிப்பாடங்களை சொல்லிக் கொடுத்தாள்.

பாலுவிற்கு நல்ல ஞாபகசக்தியும், படிப்பதற்கான ஆர்வமும் இருந்ததால் அவன் வெகு வேகமாய் அடிப்படைக் கல்வியை கற்றுக் கொண்டான். இனி அவனை ஒரு நல்ல பள்ளியாய் பார்த்து சேர்த்து விட வேண்டும்.

வாணி இந்த முடிவெடுத்து கோதாவில் இறங்கிய போதுதான் பாலுவை பள்ளியில் சேர்ப்பது எவ்வளவு குதிரைக் கொம்பான விஷயம் என்பது புரிந்தது. அவளும் எத்தனையோ பள்ளியில் ஏறி இறங்கிப் பார்த்து விட்டாள். யாருமே, அவள் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேட்பதற்கு தயாரில்லை

'இங்கு இடமில்லை. நீங்கள் வேறு பள்ளியை பாருங்கள்...' என முகத்திலடித்தாற் போல் கூறிவிட... சோர்ந்து போனாள் வாணி.

ஒரு டீக்கடைச் சிறுவனை தத்து எடுத்து அவனை படிக்க வைத்து ஒரு நல்ல நிலைக்கு அவனை உருவாக்க வேண்டும் என்று நினைத்தால் அதற்கு இவ்வளவு தடைகளா? யாருமே அவளது நல்ல முயற்சியை புரிந்து கொள்ளவில்லையா?

அதே சலிப்பான உணர்வுடன் அவள் ஒரு பள்ளியில் பாலுவின் அட்மிஷனுக்காக போராடி... அவர்கள் மறுத்ததும் சோர்வாய் திரும்பினாள்.

அப்போது அவளையே ரொம்ப நேரமாய் கவனித்துக் கொண்டிருந்த அந்த நெடு நெடு இளைஞன் வேகமாய் அவள் பக்கம் வந்தான்.

தன் கோட்பையினுள் கைவிட்டு ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"இந்த பள்ளி விலாசத்தில் சென்று பாருங்கள். உங்களுக்கு கண்டிப்பாக



அட்மிஷன் கிடைக்கும்..."

மின்னல் போல் அவளிடம் சொல்லி விட்டு அதே வேகத்தில் திரும்பி நடந்து மறைந்து விட்டான். தனது அழகான நெற்றியை சுருக்கியபடி அந்த விசிட்டிங் கார்டையே வெறித்தாள் வாணி.

ooo

## 3

வாணி மறுநாளே பாலுவுடன் அந்த விசிட்டிங் கார்டில் குறிப்பிட்டிருந்த ஆர்.கே.மெமோரியல் ஸ்கூல் வளாத்தினுள் நுழைந்தாள். அவள் நினைத்தற்கு மாறாக கட்டிடமும், பள்ளியும் பிரம்மாண்டமாய் இருந்தது.

கையிலிருந்து விசிட்டிங் கார்டை காட்டியதும் பணியாளர்கள் நிர்வாக பிளாக்கில் இருந்த பெரிய அறையைக் காட்டினர். விடுவிடுவென நடந்து அதனை நெருங்கினாள்.

அனுமதி பெற்று அதன் கண்ணாடிக் கதவுகளைக் திறந்து உள்ளே நுழைந்தபோது அவளுக்கு ஆச்சரியமே ஏற்பட்டது. குளிரூட்டப்பட்ட அறையின் பளபளப்பான மேஜைக்கு எதிரான குஷன் இருக்கையில் கம்பீரமாய் அவன்.

நேற்றுப் பார்த்து விசிட்டிங் கார்டை கொடுத்த அந்த ஆசாமி! நேற்று சாதாரணமாய்த் தெரிந்தவன் இன்று ஃபுல்சூட் கோட்டில் மிடுக்காய் இருந்தான்.

அவனையே விழிகள் விரித்து உற்றுப்பார்த்தவள் கூடவே அவன் முன்னால் மேஜையில் பளபளத்த சிறு போர்டினையும் பார்த்தாள்.

'சத்யேந்திரன், மேனேஜிங் டைரக்டர்' என எழுதப்பட்டிருக்க அவளுக்கு எல்லாமே புரிந்தது. ஆக.. இந்த பெரிய பள்ளி நிறுவனத்திற்கு இவர்தான் முதலாளி! ஆகவே நேற்று தன் நிலை உணர்ந்து உடனே விசிட்டிங் கார்டை நீட்டியிருக்கிறான். அதனால் எப்படியும் பாலுவுக்கு இப்பள்ளியில் இடம் கிடைத்து விடும். அதுபோதும் அவளுக்கு!

அவனும் மைதீட்டிய அவளது பார்வையை உணர்ந்து அளவெடுப்பது போல் அவளைப் பார்த்தவன் பார்வையைத் திருப்பினான். "உட்கார்..." என்றபடி எதிர் இருக்கையைக் காட்டினான்.

அதற்கு நன்றி தெரிவித்தபடி உட்கார்ந்து கையில் தயாராய் எழுதிக் கொண்டிருந்த அப்ளிகேஷன் பாரத்தை அவனிடம் நீட்டினாள். வாங்கி முழுமையாய் படித்துப் பார்த்து விட்டு நிமிர்ந்தவன், "ம்ம்.. பெயர் பாலுவா? சரி.. இப்போது முழு விஷயத்தையும் சொல்லுங்க.." என்றான்.

வாணி நிதானமாய் விளக்கினாள்.

பாலு தன் வீட்டு பக்கத்து டீக்கடையில் சித்ரவதை அனுபவித்தது பற்றி அதைக் கண்டு பொறுக்காமல். தான் பாலுவை தம்பியாய் தத்து

எடுத்துக்கொண்டது பற்றியெல்லாம் விவரித்தாள். பொறுமையாய் கேட்டவன் எந்தவித பதிலும் சொல்லாமல் அவளையே உற்றுப் பார்த்தான்.

வாணிக்கோ ஆற்றாமை கூடியது. தான் இவ்வளவு விவரித்தும் அவனுக்கு நிலைமை சரியாகப் புரியவில்லை...என முடிவுக்கு வந்தவள், 'சார்..' என்றபடி மீண்டும் தன் உரையைத் தொடங்கினாள்.

"சார்.. நானும் பாலுவை கூட்டிக் கொண்டு நிறைய பள்ளிகளுக்கு சென்று ஏறி இறங்கி விட்டேன்.ஆனால் யாரும் பாலுவின் நிலைமையை எடுத்துச் சொல்லியும் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள் சார். அட்மிஷன் என்றதும் வானளாவ யோசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். நீங்களே சொல்லுங்கள் சார். பொதுச் சேவை செய்வது ஒருவருக்கு உதவுவது எவ்வளவு பெரிய விஷயம். அண்ணல் காந்தியடிகள், அன்னை தெரஸா போன்றோர் சேவை புரிந்த இந்த பாரத பூமியில் இதைக் கூட புரிந்து கொள்ள மறுத்து ஒரு பிஞ்சு உள்ளத்திற்கு பள்ளியில் இடமளிக்க யோசிக்கிறார்களே... இது நியாயமா சார்...?"

அவள் மூச்சு வாங்க பேசி முடிக்க.. அதையே ரசிப்பது போல் பார்த்தவன் எவ்வித சலனமுமில்லாமல் தொடர்ந்து அப்படியே இருக்க.. வாணிக்கு சந்தேகம் வலுத்துவிட்டது. நாம் சொல்வது இன்னமும் இவனுக்கு விளங்கவில்லையா? அதையும் வாய்விட்டே கேட்டுவிட்டாள்.

அவன் அதே சிரிப்பு மாறாமல் எழுந்து அந்த அறையின் ஜன்னல் பக்கம் வந்தான். அவளையும் அருகே வரும்படி சைகை செய்ய எழுந்து பக்கத்தில் போனாள். ஜன்னல் வழியே பார்த்தால்... பள்ளியின் விளையாட்டு மைதானம் தெரிந்தது. அதில் நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியர் விளையாடிக் கொண்டிருந்தனர். அதைப் பார்த்துவிட்டு திரும்பி அவன் என்ன சொல்ல வருகிறான் என புதிராய்ப் பார்த்தாள்.

"பார்த்தாயா? ஜன்னல் வழியே உன் கண்ணுக்குத் தெரியும் அத்தனை குழந்தைகளும் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்றான். அவள் பேசாமல் அவனையே பார்க்க அவன் தொடர்ந்தான்.

"அவர்கள் எல்லோரும் உன் பாலுவைப் போல யாரும் இல்லாதவர்கள்தான். ஆதரவற்றவர்கள்... அவர்களை எல்லாம் எங்களது சேவா சங்க டிரஸ்ட் மூலம் தேர்ந்தெடுத்து எல்லா உதவிகளையும் செய்து படிக்க வைத்து வருகிறோம். இந்த ஆர்.கே. மெமோரியல் கல்வி நிறுவனம் முழுதுமே அவர்களுக்காகவே உருவாக்கப்பட்டதுதான்..."

அவன் சொல்லச் சொல்ல அவள் வாயடைத்துதான் போனாள். அவள் ஒரு பாலுவை தத்து எடுத்து படிக்க வைப்பதை பெரிதாய் சொல்ல... அவனோ நூற்றுக்கணக்கான குழந்தைகளையல்லவா தத்து எடுத்திருக்கிறான். அவனிடம் போய் சேவை செய்வது பற்றி லெக்சர் அடிக்கப் பார்த்தாளே...!

ன்னையே குட்டிக் கொண்டவளாய் அவனைப் பார்த்தாள். அவன் மீண்டும் தொடரப்போனவன் நிறுத்தி, "உங்கள் பெயரென்ன சொன்னாய்?" என்றான்.

"வா... வாணி... சார்..."

"ம்ம்... வாணி..., நீங்கள் மற்றவர்களிடம், பாலுவுக்கு அட்மிஷன் கிடைக்காதது பற்றிச் சொன்னாய். ஆனால் ஒன்றை நீ புரிந்து கொள்ள வேண்டும். எதையும் கேட்க வேண்டிய இடத்தில் தட்ட வேண்டிய இடத்தில் தட்டினால்தான் கிடைக்கும். இரக்கம் உள்ளவர்களிடம் தான் இரக்க குணத்தை எதிர்பார்க்க வேண்டும். மற்றவர்களிடம் போய் கேட்டால் இல்லையென்றுதான் சொல்வார்கள்..."

"புரிகிறது சார்..."

அவள் காது மடல்கள் அதிர பவ்யமாய் தலையாட்டினாள்.

"ஆகையால்... நீங்கள் இனி பாலு பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை. அவனுக்குத் தேவையான உடை, உணவு எல்லாவற்றையுமே நிர்வாகம் ஏற்றுக்கொள்ளும். அவன் விரும்பினால் பள்ளியின் விடுதியில் கூட தங்கிக் கொள்ளலாம். அவனுக்கு இனி ஒரு சிறந்த எதிர்காலத்தை எதிர்கால சூழ்நிலையை பள்ளியே உருவாக்கி விடலாம்..."

"ரொம்பவும் நன்றி சார்..."

"நன்றி எனக்குத் தேவையில்லை. உங்களுக்குத்தான் சொல்ல வேண்டும்..."

"எனக்கா.. என்ன சொல்கிறீர்கள் சார்?"

"அதாவது... என்னதான் நாம் உதவி செய்கிறோம் என்று அறிவித்தாலும் அந்த உதவி பெற வேண்டிய நபருக்கு தகவல் சரியாகப் போக வேண்டும். தகுதியான நபரை சரியாக தேர்ந்தெடுத்து உதவி செய்ய வேண்டும். பாலு போன்று எத்தனையோ சிறு பிஞ்சுகள் வறுமையின் பிடியில் சிக்கி சித்ரவதைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. அதை வெறுமே பார்த்து இரக்கப்படுவதோடு நிறுத்தாமல் உதவி செய்திருக்கிறீர்கள். அதற்குத்தான் நன்றி என்று சொன்னேன்..." என்ற சத்யேந்திரன் தொடர்ந்தான்.

"வாணி அத்தோடு உங்களிடம் இன்னொரு உதவியையும் எதிர்பார்க்கிறேன்..."

"சொல்லுங்கள் சார்..."

"இனி... உங்கள் கண்ணில் படுகிற பாலு போன்ற வேறு பிஞ்சுகளின் நிலை கண்டால் உடனே எனக்கு தெரிவிக்க வேண்டும். எங்களது சேவா சங்கம் உடனடியான நடவடிக்கைகளில் இறங்கி வேண்டிய உதவிகளைச் செய்யும். புரிகிறதா?"

"புரிகிறது சார்... கண்டிப்பாக சொல்கிறேன்..."

அத்தோடு அந்த சந்திப்பு முடிந்து அவனுக்கு நன்றி தெரிவித்து வெளி வந்தாள். அவள் சொன்னபடியே மறுநாளே நிர்வாகம் தந்த புத்தம் புது யூனிஃபார்முடன் பாலுவிற்கு அடிப்படைக் கல்வியைத் தரும் வகுப்பு ஆரம்பமானது.

பாலு மட்டுமல்ல நிறைய அனாதை ஆதரவற்ற சிறுவர்கள் தங்கள் சூழ்நிலையை எல்லாம் மறந்து உற்சாகமாய் சந்தோஷத்துடன் பள்ளி வளாகத்தில் துள்ளித் திரிவதைக்கண்டு வாணி அதிசயித்து மகிழ்ந்தாள்.

சத்யேந்திரன் தினமும் பள்ளிக்கு தவறாது வருகை தந்து வேலைகள் ஒழுங்காக நடைபெறுகிறதா என கவனித்துச் செல்வதைக் கண்டாள்.

ஒவ்வொரு வகுப்பு ஆசிரியையும் கூட கனிவாய் அன்பொழுக எல்லோரிடமும் இன்முகமாய் நடந்து கொள்வது அவளை ஆச்சரியப்படுத்தியது.

சத்யேந்திரன் பற்றி வெளியே விசாரித்த வகையில் பெரிய தொழிலதிபர் என்றும் தந்தை பெயரில் டிரஸ்ட் ஒன்றை நிறுவி இப்படிச் சேவைகள் செய்து

வருகிறார் எனவும் அறிந்தாள்.

அப்படியே இரண்டு வாரம் சென்றன. தினம் பாலுவை காலையில் பள்ளியில் கொண்டு விடுவதும் மாலை அழைத்து வருவதுமாய் இருந்தாள்.

மூன்றாவது வாரம் ஒருநாள் அப்படி பாலுவுடன் திரும்புகையில் எதிரே வந்த சத்யேந்திரன், "உன் இரக்க குணம் எனக்குப் பிடித்திருக்கிறது. என்னிடம் வேலைக்கு வருகிறாயா?" என்றான் நேரிடையாய் கேட்டான் அவளை திகைக்க வைத்தவாறு.

✪✪✪

# 4

சத்யேந்திரன் கேட்டது கண்டு ஒரு கணம் வாணி திகைத்துப் போக அவன் அத்தோடு நிறுத்தாமல் தொடர்ந்தான்.

"சமூக சேவை பற்றி நிறைய கனவுகளை எனக்குள் தேக்கி வைத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் செயல்படுத்த உன்னைப் போன்ற துடிப்பான பெண் எனக்குத் தேவை..."

சொல்லிவிட்டு, என்ன சொல்கிறாய்? என்பதுபோல் அவன் பார்க்க, அவள், "யோசிக்க வேண்டும். யோசித்துச் சொல்கிறேன்..." என்றாள்.

படிய வாரிய தலைமுடிகளை அழகாக சிலுப்பிக் கொண்டு அவன் திரும்பிய போது அப்போது தான் அவன் முதன் முறையாய் பார்ப்பது போல் நன்கு உற்றுப்பார்த்தாள்.

நெடு நெடு உயரம், பரந்த நெற்றி, ஆஜானுபாகுவான தோள்களுடன் திடகான உடற்கட்டு, ஆழமாய் ஊடுறுவும் காந்த விழிகள், வரிசையான பற்களைக் காட்டி சிரிக்கும் வசீகர சிரிப்பு என எல்லாமே ஒரு முறைக்கு இருமுறை பார்க்கத் தூண்டும் வகையிலே அவன் தெரிந்தான். இவனைப் போல பணமும், நல்ல குணமும் உள்ளவனிடம் வேலை பார்க்க கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!

அவள் உற்றுப் பார்ப்பதை யோசிப்பதாய் நினைத்துக் கொண்டு, "சம்பளம் ஒரு பிரச்சினையில்லை, நீ இப்போது வாங்குவதை விட இரு மடங்குத் தருகிறேன்..." என்றான்.

அவளுக்கு சிரிப்பு ஓடியது. "எனக்கும் சம்பளம் பிரச்சனை இல்லை. அதே இப்போது வாங்கும் அளவே போதும். ஆனால்..."

"ம்ம்... என்ன ஆனால்...?"

"இப்போது நான் வேலை பார்க்கும் ஷிப்பிங் கம்பெனியில் ஓராண்டு காண்ட்டிராக்ட் இருக்கிறது. அதற்குள் விடுவிப்பார்களா என்று தெரியவில்லை..."

அவன் தலையை வெட்டினான்.

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன். உங்களுக்கு இங்கு என்னுடன் பணிபுரிய விருப்பம் இருக்கிறதா?"



"இருக்கிறது சார்..."

அவள் குரலில் தெரிந்த உற்சாகத்தை ரசித்தவன் முதல் முறையாய் அவளை மேலிருந்து கீழ்வரை ஊடுருவினான்.

கண்கள் படபடப்புடன் துறுதுறுவென தலையை வெட்டி அவள் நடக்கும் பாங்கு, வார்த்தெடுத்த தங்கச்சிலை போல் பளிரிடும், அவள் அழகு, பேச்சினூடே நொடிக்கொருதரம் பளீரிடும் முத்துப்பல் புன்னகை எல்லாமே அவனை வியப்படையச் செய்தது.

அவன் தன்னையே நிதானித்து பார்ப்பது கண்டு துணுக்குற்றவளாய், "என்ன விஷயம் சார்?" என்றாள்.

அவன் சிரித்தபடி, "எனக்கு ஒரு விஷயம் புதிராக இருக்கிறது..." என்றான்.

"புதிராகவா?"

"ஆம். பொதுவாக உங்களைப் போன்று அழகு ரதியாய் இருக்கும் பெண்கள் எல்லாம் ஃபாய் பிரண்ட் பார்ட்டி கூட்டம் என ஊர் சுற்றும் போது... நீங்கள் மட்டும் எப்படி பொதுச் சேவையில் நாட்டங் கொண்டீர்கள்?... அதுதான் எனக்கு பெரும் ஆச்சரியமாய் இருக்கிறது...!"

அவன் தன் அழகை புகழ்வது கண்டு உள்ளூர மகிழ்ந்தாலும் சலனமே இல்லாதவளாய், அவளும் சிரித்தாள். "என்ன சிரிக்கிறாய்?"

"என்னைச் சொல்கிறீர்களே... நீங்களும் அப்படித்தானே? உங்களைப் போன்ற தொழிலதிபர்கள்... பணம்... பணம் என்று அலையும்போது மாறுதலாய் இருக்கிறீர்களே. அது எப்படி?"

அவள் தன்னை மடக்குவது கண்டு ரசித்துச் சிரித்தான்.

அதன் பின் சத்யேந்திரன் சொன்னது போல் அவள் வேலை பார்க்கும் ஷிப்பிங் கம்பெனியை தொடர்பு கொண்டு பேசினான். எவ்வித பிரச்சனையுமில்லாமல் வேலையை விட்டு விலகும் ரிலீவிங் ஆர்டரை வாங்கித் தந்தான்.

✪✪✪

ஒரு நல்ல நாளாய்ப் பார்த்து ஆர்.கே. அறக்கட்டளையை கவனித்து நிர்வகித்து வரும் அவனின் பர்ஸனல் செகரட்டரியாக மனமுவந்து பொறுப்பேற்றுக் கொண்டாள்.

சத்யேந்தரன் அவளுக்கு அறக்கட்டளைக்கு ஒதுக்கப்படும் நிதி பற்றி, பள்ளியின் நிர்வாகம் பற்றி கல்வித்தரம் உயர்த்துவது பற்றி என எல்லா விஷயங்களையும் விளக்கிப் புரிய வைத்தான்.

சொல்லப் போனால் முந்தைய வேலையை விட இந்த வேலை வாணிக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. வண்ண வண்ண மலர் கொத்துகளாய் துள்ளி குதித்து ஓடும் சிறுவர் சிறுமியர்களுடன் எந்நேரம் இருப்பது இனம்புரியாத மகிழ்ச்சியைத் தந்தது.

பாலுவும் மிகுந்த ஆர்வம் கொண்டவனாய் படிப்பில் கவனம் செலுத்தினான். அடிப்படைக் கல்வியை சீக்கிரமே பயின்று விட்ட அவன் ஐந்தாம் வகுப்பில் முறைப்படி சேர்க்கப்பட்டது வாணிக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

வாணி அத்தோடு நில்லாமல் பொது இடங்களில் அனாதையாய் திரியும்

பிறந்து வசதியற்று படிப்பை நிறுத்தி இருக்கும் பிஞ்சுகள் என சிறுவர்கள், படிக்க வசதியற்று படிப்பை நிறுத்தி இருக்கும் பிஞ்சுகள் என ஒவ்வொருவராய் தேடிப்பிடித்து, பள்ளியில் சேர்ந்தாள்.

அவளது சுறுசுறுப்பைக் கண்டு சத்யேந்திரனே வியக்கத்தான் செய்தான்.

ஒரு நாள் அவளை தனது தொழில் கூடங்களுக்கு அழைத்துச் சென்றபோதுதான் அவனைப் பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடிந்தது. டெக்ஸ்டைல் யூனிட், சிந்தடிக் பேக்டரி, மோல்டிங் உற்பத்தி என பலவித வியாபார ஸ்தலங்கள் அவனுக்கு.

பரம்பரை பரம்பரையாக கோடீஸ்வரர்களாய் இருந்து வரும் ராயல் பேமிலி. ஒரு முறை கன்ஸ்ட்ரக்ஷன் ஸ்பாட்டுக்கு சென்று நேரமாகிவிட மதிய உணவருந்த தனது பங்களாவிற்கும் அழைத்துச் சென்றான்.

விஸ்தாரமான பரப்பளவில் பச்சை மரங்கள் சூழ கிரானைட் பளபளப்பில் மினுங்கிக் கொண்டிருந்த பங்களாவினுள் சங்கோஜப்பட்டு தயங்கித் தயங்கிதான் நுழைந்தாள் அவள். 'சும்மா...வா...' என உரிமையுடன் கை பிடித்து அழைத்துச் சென்றது அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

அவன் எப்போதும் தன்னை செகரட்டரி, தன்னிடம் வேலை பார்ப்பவள் என்று எண்ணாது நண்பனைப் போல் நட்புடன் பேசி பழகும் அவனது பாங்கு அவளை ரொம்பவும் கவர்ந்திருந்தது.

அதனாலே சில சமயங்களில் உரிமையாய் அவன் கைகளைப் பிடிக்கும்போது விரல்களோடு கோர்க்கும்போது அவளையறியாமலே அவள் அதை அனுமதித்தாள்.

அவன் கூட்டிச்சென்ற அவ்வளவு பெரிய பங்களாவில் அவனது தாயாரும் சில பணியாட்களும் மட்டுமே. "என்ன வேறு யாரும் இல்லையா...?" என அவள் கேட்டதற்கு பின்னொரு நாளில் பெரிய விளக்கம் கொடுத்தான் அவன்.

"வாணி, நான் பெரும் கோடீஸ்வரனாய் இருந்தாலும் இப்படி தானம், தர்மம், அறக்கட்டளை சேவை என லட்சக்கணக்கான ரூபாயை வாரியிறக்கிறேனே... எதனால் தெரியுமா...?"

"எதனால்...?" என்றாள் புரியாதவளாய்.

"அதற்குப் பெரிய சோகமான காரணம் ஒன்று இருக்கிறது. அதை நீ கேள்விபடவில்லை என நினைக்கிறேன்..."

"புரியவில்லையே... சார்..."

"புரியும்படியே சொல்கிறேன். அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என எங்கள் குடும்பம் ரொம்பவும் பெரியது. மொத்தம் பன்னிரண்டு உறுப்பினர்கள், பத்து வருடங்களுக்கு முன் நடந்த ஒரு மோசமான கார்விபத்தில் அத்தனை பேரும் பலியாகி விட்டனர். எஞ்சியது நானும் எனது தாயும் மட்டும்தான். சந்தோஷமும் குதூகலமுமாய் இருந்த இந்த பங்களாவே அதன்பின் அமைதியாகிவிட்டது. வாழ்க்கையே வெறுத்து போய் விட்டது. அதன் பின் ஒரு ஐந்து வருடங்களில் மனதைத் தேற்றி அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தி நிறைய சேவைகள் செய்ய ஆரம்பித்தோம். ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்களை அரவணைத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றத்தான் இந்த மெமோரியல் ஸ்கூலை ஆரம்பித்தோம்..."





அவன் சொல்லி முடித்ததும் அவளுக்கு நிறைய விஷயங்கள் புரிந்தது. இவ்வளவு நாள் அடிக்கடி மனதை குடைந்த கேள்விக்கும் விடை தெரிந்து கொண்டாள்.

அவளும் எத்தனையோ பணக்காரர்களை அறிந்திருக்கிறா. ஏதோ பெயருக்கு இரக்கப்பட்டு சில உதவிகள் செய்வார்கள். ஆனால் பொதுச் சேவைக்காக இப்படி பணத்தை அள்ளி வீசும் பணக்காரராய் சத்யேந்திரனைப் பார்த்தபோது திடுக்கிடத்தான் செய்தாள்.

அது எப்படி இப்படி ஒரு பரோபகாரித்தனமாய் ஒருவன் இருக்க முடியும் என வியந்தாள்.

சத்யேந்திரன் சொன்ன காரணம் அவள் வியப்பு முழுவதையும் நீக்கி அவன் மீது இரக்கப்படவும் வைத்தது. "ரொம்பவும் துயரமாய் நடந்திருக்கிறது. நிறைய வருந்தியிருப்பீர்களே... சார்..." என்றாள் வருத்தம் தொனித்த குரலில்.

அவன் மெல்ல தலையசைக்க அவனை மேலும் ஆறுதல் படுத்தும் விதமாய் பேச நினைத்தவள், "எனக்கும் இதே போல்தான் சார். சிறுவயதிலே விபத்தொன்றில் பெற்றோர்களை இழந்துவிட்டேன்..." எனவும் அவன் ஆச்சரியப்பட்டு போனான்.

"அப்படியா? அப்படியானால் அந்த இழப்பின் தவிப்பு, கொடுமை உங்களுக்குப் புரிந்திருக்கும்..." இம்முறை அவன் சொன்னதற்கு அவள் தலையசைக்க, அவன் அத்தோடு நிறுத்தாமல், "பார்... நாம் இருவரும் ஒரே... நிலைமையில்,... வி... ஆர்... இன்... த... ஸேம்... போட்...!" எனச் சொல்லியபடி அவள் கைகளைக் கோர்த்து விரல்களை பிணைத்துக்கொண்டான்.

அப்படி அவள் விரல்களை பிணைத்துக்கொண்டு அவன் பங்களாவின் உட்புற பெரிய ஹாலுக்குள் நுழையவும் எதிரே... அவனது தாயார் வரவும் சரியாயிருந்தது.

அந்தத்தாயின் கண்கள் மகன் ஒரு பெண்ணின் கரத்தோடு பிணைத்தபடி நுழைவதை ஆச்சரியத்துடன் பார்த்தன.

ஆனால் சத்யேந்திரன் மிக இயல்பாய் அவளிடம் பழகினான். அவளது இரக்க குணங்களை கண்டு "வாணி, நல்ல காரியங்கள் நிறைய செய்துவிட்டாய்... யூ... ஆர் கிரேட்...!" என்றபடி அவளுக்கு ஒரு சல்யூட்டும் அடிக்க மகிழ்ச்சியில் திணறித்தான் போனாள்.

அவளுக்கும் சத்யேந்திரனிடம் பேசுவது, பழகுவது, உடன் செல்வது எல்லாமே எளிதாய் இருந்தது. நிறைய நேரங்களில் அவன் தன் முதலாளி என்ற உணர்வே இல்லாமல் மனதில் தோன்றிய கருத்துக்களை எல்லாம் அப்படியே சொல்லிவிடுவாள்.

அவனும் அதை முழுசாய் உள்வாங்கிக் கொள்வான். அவள் சொன்ன விஷயங்களில் அவனுக்கு ஏதும் மாற்றுக் கருத்து இருந்தால் சிறிது நேரம் கழித்து அவள் மனம்கோணாமல் மறுதலித்து தன் கருத்தைச் சொல்லுவான்.

தனக்காக இவ்வளவு பதவிசாக அவன் விளக்கிச் சொல்வதைக் கண்டு வியப்புடன் மகிழ்வாள் அவள். அந்த மாதிரி சமயங்களில் "யெஸ்... சார்...!" என்றபடி பதிலுக்கு ஒரு சல்யூட் அடித்து அவனை ரசிக்க வைப்பாள்.

அவளுக்கு என்னவோ சத்யேந்திரனிடம் பழகுகையில் வருடக்கணக்காய்

அவன் தெரிந்தவன் போல் அவளுடன் பழகுவதைப் போல்தான் உணர்வாள், ஒரு நாள் தனக்குத் தோன்றிய இந்த விஷயத்தை சிரித்தபடி அவனிடம் கூற புருவம் உயர ஆச்சரியப்பட்டான்.

"எனக்கும் அப்படித்தான் எப்போதும் தோணுகிறது வாணி. அதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என நினைக்கிறாய்?" என்றான்.

அவளும் விழிகளை விரித்து தலையைச் சிலுப்பி, "எனக்குப் புரியவில்லை..." என்றாள்.

" என்ன இது கூடவா புரியவில்லை?" என சொல்லியபடி அவளைக் குட்டுவது போல் கைகளை கொண்டு வந்தவன் அப்படியே அவளது அழகான தலையைப் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டினான். "இரண்டு பேரும் ஒரே அலைவரிசையில் சிந்திக்கிறோம்... என்று அர்த்தம்..." என விளக்கமும் கொடுத்தான்.

ஆனால் அவன் சொன்னது போலவே நிறைய நேரங்களில் நடப்பது கண்டு வாணியும் வியந்தாள். அலுவலகத்தில் வீட்டிற்குச் செல்ல தாமதமானாலும் சரி தன் வேலைகள் முழுவதையும் அன்றே முடித்துவிட்டுச் செல்வதில் தான் குறியாயிருப்பாள்.

அனுப்ப வேண்டிய ஈமெயில்கள், பேங்க் மூலம் சத்யேந்திரனுக்கு வந்திருக்கும் அறிவிப்புகள் என எவ்வளவு நேரமானாலும் எல்லாவற்றையும் சோம்பல்படாமல் சேகரித்து பட்டியலிடுவாள்.

தயார் செய்ததும் அவன் மேஜையில் கொண்டு போய் வைப்பாள். அவனும் அதற்காகவே காத்திருந்தவன் போல் காத்திருப்பான்.

அன்றொரு நாள் அப்படித்தான் ஃபைல்களை பார்த்துக் கொண்டிருந்த சத்யேந்திரன் அவள் வெகு அருகாமையில் வந்தவன் ஒரு நிமிடம் நிதானித்து அவள் முகத்தைப் பார்த்தான்.

அவன் இவ்வளவு அருகே முட்டுவது போல் வந்து நின்றும் அசராமல் அப்படியே இருக்கிறளே... இவளுக்கு இவ்வளவு தைரியமா?

ஆச்சரியப்பட்டு அவளையே உற்றுப் பார்த்தவன் அவளது மைதீட்டிய விழிகளில் வந்து நின்றான். நன்றாக விரித்து மலர்த்தியபடி அவனையே பார்த்தாள் அவள்.

அதில் எவ்வித பயமோ சஞ்சலமோ இல்லை. சொல்லப்போனால் அவன் செய்யப்போவதை அனுமதிக்கும் செய்தியைச் சொல்வது போல்தான் இருந்தது.

அதற்குமேல் அவனும் தாமதிக்கவில்லை.

அப்படியே அவளை கரங்களால் அள்ளி, பூக்குவியலாய் நெஞ்சில் சாய்த்து இறுக கட்டியணைத்தான்.

திடீரென ஏற்பட்ட அணைப்பு ஸ்பரிசத்தில் செய்வதறியாமல் திகைத்தாள் வாணி.

✪✪✪

# 5

வாணி அதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. சத்யேந்திரன் உனக்கு ஒரு பரிசு கொடுக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு திடீரென கட்டியணைத்தது அவளுக்கு இன்ப அதிர்ச்சியைத்தான் ஏற்படுத்தியது.

அந்த அதிர்ச்சியில் ஓரளவு திகைத்துப்போனாலும் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நினைப்பு விழித்திருந்தாலும் மூளை எதிலோ மயங்கிக் கிடந்தது. அந்த இதமான அணைப்பும் அவன் நெஞ்சில் சட்டென பொதிந்த ஸ்பரிசமும் மீளமுடியாத மயக்கத்தை அவளுள் ஏற்படுத்தியிருந்தது.

அவள் விடுபட நினைத்தாலும் விடுபட முடியாத அளவுக்கு சொக்கிப் போயிருந்த அவள் கண்களில் கிறக்கம் தொனித்தது. அதைக் கண்டு சத்யேந்திரனுக்கு மேலும் தைரியம் கொடுத்ததோ என்னவோ அப்படியே தனது முகத்தை அவள் முகம் அருகே கொண்டு போனான்.

அப்படியே தனது உதடுகளால் அவளது உதடுகளைத் தேட முயன்றபோதுதான் அவனது உஷ்ணமான மூச்சுக்காற்ற பட்டு உணர்வுக்கு வந்தாள் அவள்.

ரொம்ப நாள் காதலி போல் அவனது அணைப்பை வாங்கிக்கொண்டு எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் துவண்டு கொண்டிருக்கும் தன்நிலை கண்டு உள்ளூர வெட்கித்தான் போனாள்.

ஐயோ..! விடுங்கள்...! என்றபடி தனது மலர்க்கரங்களால் அவனது பிடிகளை விலக்கி சுகமான அணைப்பிலிருந்த விடுபட சிரம[illegible]த்தான் இருந்தது. ஆனால் கட்டிக் கொண்டிருப்பது காதலன் இல்லையே.. முதலாளி ஆயிற்றே!.

ஏதோ சந்தோஷ மிகுதியில் வெற்றிக்களிப்பில் இப்படி ஒரு வேடிக்கை செய்கிறானா? ஆனால் அவன் இப்படி உரிமையுடன் கொண்டாட மனைவியோ காதலியோ அல்லவே..!. மேலும் அவள் மட்டும் உணர்வுகளற்ற மரப்பாச்சி பொம்மையா? அ[illegible] உணர்வுகள் உள்ளவள் தானே? திடீரென அந்நியன் ஒருவன் கட்டிப் [illegible]த்தால் அவளால் அதை எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? எப்படி தாங்கிக் [illegible]ொள்ள முடியும்?

நிமிர்ந்து விழிகளை உயர்த்தி சத்யேந்திரனைப் பார்த்தபோது ஆசையாய் அவன் அவளை பார்த்துக் கொண்டிருந்த விதம் அவளைத் தடுமாறச் செய்தது.

✪✪✪

## 6

மறுநாள் அந்த அதிசயம் நடந்தது. சத்யேந்திரனும் சரி, வாணியும் சரி அப்படி ஒரு 'அணைப்பு' விஷயம் நடந்ததாய் கொஞ்சம் காட்டிக்கொள்ளவில்லை.

அவர்கள் பாட்டுக்கு வந்தார்கள். அலுவல் விஷயங்களை பேசினார்கள். எதுவுமே நடவாதது போல் வேலை பார்த்தார்கள்.

சத்யேந்திரனை விட வாணி இப்படி நடமாடியது அவனுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது. எவ்வளவு பெரிய விஷயத்தை, குற்றத்தை செய்திருக்கிறான்? அவள் அனுமதியில்லாமல் அவளைப் பிடித்து இறுக அணைத்திருக்கிறான். இந்தத் தவறுக்கு அவனைக் கண்டிக்காமல் அட்லீஸ்ட் இனி இப்படி கண்டிப்பாய் நடக்கக் கூடாது என்ற ஒரு; எச்சரிக்கை கூட செய்யாமல் அவள் பாட்டுக்கு நடமாடிக் கொண்டிருக்கிறாளே!

இதற்கு என்ன அர்த்தம்? இந்த பாசாங்கிற்கு என்னதான் முடிவு? ஒரு வேளை உள்ளூர அப்படி ஒரு அனுபவம் இன்னொரு முறை ஏற்படாதா என எதிர்பார்க்கிறாளா?

அவள் அசட்டுத்தனமாய் இப்படியே நினைத்து தன்னைத்தானே கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்க... மூன்றாம் நாள் மதிய இடைவேளையில் சத்யேந்திரனே அவளை கூப்பிட்டு தன் எதிரே உட்கார வைத்து விட்டு அந்தப் பேச்சை ஆரம்பித்து விட்டான்.

"வாணி... அன்று நடந்ததைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்றான் சாதாரண குரலில். "எது...? எதைப்பற்றி கேட்கிறீர்கள்?" புரிந்தாலும், புரியாதது போல் கேட்டாள் வாணி.

"அட... அதற்குள் மறந்து விட்டாயா? மறக்கக் கூடிய விஷயமா அது...? அதான் உன்னை திடீரென கட்டிப்பிடித்து அணைத்தேனே... நீயும் அனுமதித்தாயே...?"

அவன் சொல்லச் சொல்ல அவள் முகம் சிவந்து போனது. கட்டிப்பிடித்து அணைத்ததோடு மட்டும் நிறுத்தாமல் நீயும் அனுமதித்தாயே என்று சொல்லிவிட்டானே... கெட்டிக்காரணத்தனமாய் கண்டுபிடித்துவிட்டானே!

இப்போது முகத்தை எங்கு எப்படி கொண்டு போய் வைப்பது?

தவிப்புடன் அவள் பேசாமல் இருக்க அவனே அவளது சங்கடத்தை விலக்குபவனாய் தொடர்ந்து பேசினான்.

✪✪✪

அப்படித்தான் ஒருநாள், "இன்று உன்னை மதிப்பீடு செய்யப்போகிறேன்... செய்யட்டுமா?" என்றான். அவன் சொல்ல அவளுள் படபடப்பு கூடியது. 'அவன் நிஜமாகவே அவளை உற்றுப் பார்த்து வர்ணிக்க ஆரம்பித்து விட்டான்.



"இந்த நீளமான கூந்தல் அழகு. மை விழி படபடக்கும் விழியழகு. வில்லான புருவங்களை மேலும் மேலும் நீ உயர்த்திப் பார்க்கும் ஆளை வீழ்த்தும் பார்வை அந்த வரிசையான முத்துப்பல் புன்னகை, அது... என்ன... அந்த கன்னம் ஒரு முடிக்கற்றை ஒன்றை ஸ்டைலாய் அடிக்கடி பின்னுக்கு தள்ளி விடுகிறாயே... அதுகூட அழகுதான்...! உண்மையாய் இன்னொன்றையும் சொல்லட்டுமா? இந்த 'உலக மகா ரதி' என்று ஓர் வார்த்தை வர்ணிப்பு உண்டே... அது வேறு யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ... உனக்கு கண்டிப்பாய் பொருந்தும்... அதனால் எனது மதிப்பீட்டில் உனக்கு நூறு பர்ஸண்ட் மார்க்... வாணிக்கு உலக மகா ரதி என்ற பட்டமும் கொடுக்கப்படுகிறது..."

அவன் பெரும் அறிவிப்பு போல் எல்லாவற்றையும் சொல்லி முடித்தான். அவளுக்கு அப்படியே அலாக்காய் தூக்கி யாரோ தட்டாமாலை சுற்றி இன்பக்கடலில் விட்டது போலிருந்தது. அந்த இனிமையான கிறுகிறுப்பில் இருந்து லேசில் அவளால் வெளிவரமுடியவில்லை. கண்கள் மூடி சொக்கிப் போனவளாய் ஓரிரு நிமிடம் அசையாது அப்படியே நின்றாள். மனதுள் சந்தோஷப் பட்டாம்பூச்சிகள் சிறகடித்து அவளை சிறக்கமான மோனநிலைக்கு கொண்டுபோய் போக... அவன் படபடவென அவள் முகம் முன் விரல்களால் சொடுக்கிட்டான்.

"ஹலோ... ஹலோ... பாதிதானே வர்ணிப்பு செய்திருக்கிறேன்... இதற்கே இப்படியா...?" என்றபோது கன்னக் கதுப்புகள் சிவந்து போக நாணமாய் குனிந்தாள் அவள்.

அவன் அப்படி குங்குமமாய் சிவந்த அவளது முகத்தை நிமிர்த்தி, படபடத்த அவளது மைவிழிகளையே உற்று நோக்கியபடி பேசினான்.

"இவ்வளவு மார்க் கொடுத்து, நிஜத்தை சொல்லி உன்னை பூரிக்க வைத்திருக்கிறேனே? எனக்கு பரிசொன்றும் கிடையாதா?"

"பரிசா?"

அவள் மறுபடியும் புரியாமல் விழிக்கப் போக அவனோ, "இதற்கெல்லாம் உன்னிடம், கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது... டக்கென்று கொடுத்து விட வேண்டும்..." என்றபடி மறுபடியும் அவளை வாரியிழுத்து இறுக அணைத்து முத்தமிட்டான் அவன்.

✪✪✪

## 7

வேலை முடிந்ததும் சத்யேந்திரனின் பங்களாவிற்கு கிளம்பினாள் வாணி. சத்யேந்தரன் வேலை இருப்பதாய் கூறி அவளுக்கு முன்னரே கன்ஸ்ட்ரக்ஷன் ஸ்பாட் ஒன்றிற்கு கிளம்பிச் சென்றுவிட்டான்.

அலுவலகக் காரில் அவள் வீடு நோக்கி பயணிக்கும் போதும் திடீரென

சத்யேந்திரனின் தாயார் எதற்காக நம்மை வரச் சொல்லியிருக்கிறார்கள்? அதுவும் சத்யேந்திரன் இல்லாமல் தான் மட்டும் போய் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? என்ற கேள்வியே அவளைக் குடைந்தது.

அதே எண்ணத்திலே இறங்கி, பங்களாவின் பெரிய கேட் கதவுகள் வழியாய் உள்ளே சென்றாள்.

உள்ளே முன் ஹாலில் பக்திப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்க சோபாவில் பூரணி அம்மாள் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. வாணி வருவதை தற்செயலாய் திரும்பியபோது அவளும் கவனித்து விட்டாள்.

புன்னகையுடன் எழுந்து, 'வாம்மா.. உன்னை வரச் சொல்லியிருந்தேனே...' என்றபோது பதிலுக்கு கைகூப்பி பெரும் நமஸ்கரிப்பு செய்தாள் வாணி.

பூரணி அம்மாள் அவளை அமரச் செய்து அவள் மறுத்தும் காபி, டிபன் அயிட்டங்களை எல்லாம் கொடுத்து உபசரித்தாள். அவளது குடும்பம் பற்றி, அறக்கட்டளை சேவைகளில், அவள் காட்டும் ஆர்வம் பற்றியெல்லாம் அக்கறையாய் விசாரித்தாள்.

வாணியும் உற்சாகமாய்த்தான் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் மூளையின் பகுதியில், இந்த விசாரிப்பெல்லாம் எதற்காக? என்ற கேள்வியே ஓடிக்கொண்டிருந்தது.

கொஞ்ச நேரம் பேசி முடித்து விட்டு பூரணி அம்மாள் அவளை வீட்டைச் சுற்றி காண்பிப்பதற்காக அழைத்துச் சென்றாள். பின்புற பெரிய தோட்டத்துப் பகுதியில் அனைத்து வகை மரங்களும் இருந்தன. தான் பயிரிடும் வித விதமான காய்கறிச் செடிகள் பற்றி தோட்டக் கலையில் தனக்குள்ள ஆர்வம் பற்றியெல்லாம் விளக்கினாள் பூரணி அம்மாள்.

எல்லாவற்றையும் ஆர்வமாய்த் தான் கேட்டுக் கொண்டிருந்தாள் வாணி. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இப்படி சுற்றிப் பார்த்தலிலும் பேச்சிலும் முடிந்து விட, நேரமாவதை உணர்ந்து வாணி, "சரி நான் கிளம்புகிறேன் அம்மா..." என்று கூறியபோது தான் பூரணி அம்மாளுக்கு ஞாபகம் வந்தது. "இரு... இரு... நான் உன்னை வரச் சொன்ன விஷயத்தையே மறந்து விட்டேன்..." என்றபடி அவசரமாய் எழுந்து உள்ளே போனாள். திரும்பி வரும்போது அவள் கையில் புத்தம் புது காஞ்சிபுர பட்டுப்புடவை.

கிளிப்பச்சை நிறத்தில் மஞ்சள் ஜரிகை பார்டருடன் அழகாய் இருந்த புடவையை வாணியிடம் நீட்டினாள்.

"இது... உனக்குத்தான்... வாங்கிக்கொள்..." என்ற போது வாணி புரியாமல்தான் விழித்தாள்.

"எனக்கா...? எனக்கு எதுக்கம்மா?" நம்ப முடியாமல் கேட்டவளின் கைகளைப் பிடித்து அழுத்தினாள் பூரணி அம்மாள். "வாணி, அன்றே இதை உனக்குப் பரிசாய் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். அன்று கொடுக்க மறந்து விட்டதால்தான் சத்யேந்திரனிடம் சொல்லி உன்னை வரச் சொன்னேன். வாங்கிக் கொள்...!"

பூரணி அம்மாள் வற்புறுத்த புடவையை வாங்கிக் கொண்டு நன்றி சொன்னாள் வாணி. கூடவே நம்மை வரச்சொல்லிய காரணம் இதற்குத்தானா? என சலிப்பான நிம்மதி பெரு மூச்சும்வெளியிட்டாள்.

ஆனால் அவள் கிளம்பப் போகையில்தான் பூரணி அம்மாள் அழைத்தது அதற்கு மட்டுமல்ல என்பது புரிந்தது.

வாணி நன்றி தெரிவித்தபடி எழுந்தபோது, "இரும்மா... இன்னொரு விஷயமும் இருக்கிறது..." என்று சோபாவில் பூரணி அம்மாள் உட்காரச் சொன்னபோது வாணிக்கு ஒன்றும் பிடிபடவில்லை.

எதையோ பூரணி அம்மாள் அவளிடம் கேட்க நினைத்து தயங்குவது போல் கூடத்தெரிந்தது.

அந்த தயக்கத்தை போக்க விரும்பியவளாய் வாணி அவளே, "சொல்லுங்கம்மா... என்ன விஷயம்?" என்றாள் வாணி.

பூரணி அம்மாள் தயக்கம் நீங்கினாலும் வார்த்தைகளைக் கோர்ப்பதில் தடுமாறினாள். "அது... அது... நீ... நீ... தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது... வாணி..."

பூரணி அம்மாள் பீடிகையுடன் இழுக்க... அம்மாளின் கையைப் பற்றிக் கொண்டாள் வணி.

"ஐயோ... என்னிடம் தயக்கம் எதுவும் வேண்டாம். சும்மாச் சொல்லுங்க அம்மா..." என்றாள். பூரணி அம்மாள் இப்போது நிமிர்ந்து வாணியை நேர் பார்வை பார்த்தாள்.

"வாணி, நீ... நம்... சத்யேந்திரன் பற்றி என்ன... என்ன... நினைக்கிறாய்...?" என்றாள்.

தயங்குவது போல் தயங்கி தெள்ளத் தெளிவாய் பூரணி அம்மாள் கேட்க அப்படியே திடுக்கிட்டுப் போனாள் வாணி. சத்யேந்திரனைப் பற்றி நம்மிடம் ஏன் கேட்கவேண்டும்? இதன் உள்ளர்த்தம் என்ன? என்றெல்லாம் அவள் குழப்பமாக பூரணி அம்மாளோ அவள் பதிலை எதிர்பார்ப்பவளாய் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா... அவர்... அவர்... சத்யேந்திரன்... என்... என்னுடைய பாஸ்... மிகத் திறமையானவர். கடும் உழைப்பாளி. இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்ததுதானேயம்மா?"

அவளும் அதே திணறலுடன் வார்த்தைகளைக் கோர்த்து சொல்லி முடிக்க பூரணி அம்மாள் சிரித்தாள்.

"அது.. எனக்கும் தெரியும் வாணி. நான் கேட்க வந்தது அதுவல்ல."

"வேறு என்ன அம்மா?"

வாணி ஆவலாய் கேட்க பூரணி அம்மாளின் முகம் சற்றே மாறியது.

"வாணி, அவனைப் பற்றி... உன்னுடைய அபிப்பிராயம் என்ன... அதைச் சொல்..."

பூரணி அம்மாள் எதற்கோ இப்படி கேட்க வருகிறார்களா? என நினைப்பு வாணியினுள் ஓட அவளையறியாமல் ஒருவித படபடப்பும் தொற்றிக் கொண்டது.

ஆயினும் எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டவளாய் சாதாரணமாகவே பூரணி அம்மாளைப் பார்த்தாள்.

"அவர்... மிக ...நல்லவர். எல்லாவற்றுக்கும் மேல் அவர் என் பாஸ். நான் அவரது செகரட்டரி..."

ஒருவாறு சொல்லி சமாளித்து விட்டோம் என்று வாணி நினைக்க... அவளது பதிலையே தனக்கு வாக்காய் வைத்துக் கொண்டு அடுத்த கேள்வியை ஆரம்பித்தாள் பூரணி.

"அவன் பாஸ். நீ செகரட்டரி. அவ்வளவுதானே... அவ்வளவுதானே?" என்றபோது தான் வாணிக்கு சுரீரென ஏதோ உரைத்தது. விஷயம் நாம் நினைத்த போல் அல்ல என்பதும் புரிந்தது.

முதல் முறையாக சத்யேந்திரன் அவளை அழைத்துக் கொண்டு பூரணி அம்மாளுக்கு அறிமுகப்படுத்திய போது அவள் கைகளை விடாமல் கோர்த்திருந்தது அவளது நினைவில் ஓடியது.

அதனால்... அப்படிப்பட்ட விஷயங்களில் ஏற்பட்ட சந்தேகங்களால்தான் பூரணி அம்மாள் இப்படியெல்லாம் கேட்கிறார்களா?

இந்த அம்மாளுக்கு சத்யேந்திரன் அவள் கைகளை கோர்த்தது மட்டும்தானே தெரியும்? அடிக்கடி காதலி போல் அவளை அணைத்துக் கொண்டிருக்கும் விஷயம் நல்லவேளை... தெரியாது போலும்... சத்யேந்திரன் இதையெல்லாம் போய் தன் தாயிடம் சொல்லிக் கொண்டிருப்பானா?

குறும்பாய் அவள் நினைத்துக் கொண்டிருக்க பூரணி அம்மாள் அடுத்து கேட்ட கேள்வி, அவளை நிஜமாக தூக்கிவாரிப் போட்டது.

"அதாவது... வாணி... உங்களுக்கிடையே... பாஸ்... செகரட்டரி... அவ்வளவுதானே...? வேறு எந்தப் பழக்கமும் இல்லையே...?" என்றாள்.

இப்படி பொட்டிலடித்தாற்போல் பூரணி அம்மாள் கேட்ட கேள்வி கண்டு வாணி திணறித்தான் போனாள். இதற்கு என்ன பதில் சொல்வாள்? என்ன தான் பதில் சொல்ல முடியும்?

மேலும் இந்தக் கேள்விகள்தானே தினம் அவளை குடைந்து கொண்டிருக்கின்றன. இதற்கு விடை தெரியாமல் விடைகாண முடியாமல்தானே தினம் தினம் தவித்துக் கொண்டிருக்கிறாள்?

அவள் பேந்தப் பேந்த விழிக்க, "உன்னைத் தான் கேட்கிறேன் வாணி..." என்றாள் பூரணி அம்மாள் பதிலுக்கு அவசரப்படுத்துபவளாய். வாணி பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை.

"அம்மா... அது... அது... அப்படித்தான். வேறு எந்தப் பழக்கமும் கிடையாது..."

அத்தோடு பூரணி அம்மாள் விடவில்லை. மேலும் குடைந்தாள்.

"அப்படியானால் வாணி, நீயும் அவனை முதலாளியாய்த்தானே பார்க்கிறாய்? வேறு எந்த நினைப்பும் உனக்கு கிடையாதே?"

பழத்தில் ஊசியேற்றுவது போல் நிதானமாய் பூரணி அம்மாள் கேட்க வாணிக்கு கொஞ்சம் கொஞ்சமாய் புரிந்து போயிற்று. செகரட்டரியாய் வந்து எங்கே தன் மகனை மயக்கி கொண்டு போய் விடுவாளோ என பூரணி அம்மாள் பயபபடுவது தெரிந்து போயிற்று.

இதற்கு என்ன பதில் சொல்ல...? என ஒருகணம் தடுமாறி சிந்தித்தவள் மறுகணமே தயக்கம் நீங்கினாள்.

"இல்லையம்மா, எனக்கு வேறு எந்த நினைப்பும் கிடையாது. நானும் அவரை முதலாளியாய்த்தான் பார்க்கிறேன்.." குரலை உயர்த்தி அவள் சொல்ல



நினைத்தாலும் அவளையறியாமல் குரல் கம்மியது. முகம் வெளிறியது.

ஆயினும் அவளிடம் எதோ ஒரு தவிப்பு உள்ளூர எழுந்து கொண்டு இருக்க அதனாலே கேட்டாள். "அம்மா, இதெல்லாம் எதற்காக நீங்கள் கேட்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா?" என்றாள்.

இம்முறை பூரணி அம்மாள் பயம் நீங்கிச் சிரித்தாள்.

"சொல்கிறேன் வாணி. நம் சத்யேந்திரன் தன் மனதில் வேறு யாரையும் நினைத்து காதல் கீதல் போன்ற விஷயங்களில் விழுந்து விடக்கூடாதே என்ற பயம்தான். மேலும் அவனை மணமுடிக்க அவன் மனைவியாக தயாராய் ஒரு பெண் காத்துக் கொண்டிருக்கிறாள்... தெரியுமா?" என்றாள்.

"அப்படியா...? யார்... அது அம்மா?"

உள்ளுக்குள் ஏதோ உடைந்து போய் விட்ட பலஹீனக் குரலிலே வாணி கேட்க... பூரணி அம்மாள் தெளிவாய் உச்சரித்தாள்.

"மஞ்சரி! அவனது முறைப் பெண் மஞ்சரி...! " என்றாள்.

✪✪✪

## 8

மறுநாள் சத்யேந்திரன் இரண்டு நிமிடம் தான் மஞ்சரி பற்றி பேசியிருப்பான். அதுவும் விஷயத்தை படபடவென சொல்லிவிட்டு பதிலுக்கு காத்திராமல் வைத்துவிட்டாள்.

ஆனால் வாணிக்கு அந்த ரெண்டு வரிகளில் எல்லாவற்றையும் தெள்ளத் தெளிவாய் உணர்த்தி விட்டான். எல்லாவற்றிலும் முக்கியமாய் மஞ்சரியை அவன் 'லூசு' என வர்ணித்து அவன் எவ்வளவு சரியாய் அவளை எடைபோட்டு வைத்திருக்கிறான் என்பதை உணர்த்தியது.

லூசு... இந்த மஞ்சரிக்குப் பொருத்தமான பெயர்தான். லூசு போனதும் அலுவலகம் வருகிறேன்... என்கிறான். அப்படியானால் இந்த மஞ்சரி தொந்தரவிற்கு பயந்துதான் அலுவலகம் வராமல் பெங்களூரில் வேலை இருப்பதால் கூறி... அங்கு உட்கார்ந்திருக்கிறானோ?

அப்படித்தான் இருக்க வேண்டும்! பூரணி அம்மாள் சத்யேந்தரனுடன் மஞ்சரியை பழக விட இப்படி ஒரு எற்பாடு செய்ய... அதைத் தவிர்க்கவே அவன் பெங்களூர் சென்றுவிட்டான்.

அவளிடம் கூட சொல்லாமல் சென்று விட்டானே... என்று முன்பு கவலைப் பட்டவளுக்கு இப்போ அவன் அவசரமாய் சென்ற காரணம் புரிந்ததும் மனது சாந்தமாகியது.

அதற்குள் எதிரே இருந்த மஞ்சரி ரிசீவரை வாங்கியவள் மறுமுனையில் சத்யேந்திரன் வைத்து விட்டதை உணர்ந்து படபடத்துக் கொண்டிருந்தாள்.

"அத்தான்... என்ன சொன்னார்கள்...? சொல்லு! சொல்லு!" என அரித்தவளிடம், "அது ஒன்றுமில்லை மேடம். வேலைகளை எல்லாம்

ஒழுங்காகப் பார்த்து உங்களிடம் ஒப்புதல் வாங்கிக் கொள்ளச்சொன்னார்கள். உங்கள் சொல்படி நடக்க வேண்டும் என்று என்னை பணித்திருக்கிறார்கள்..." என்றாள்.

சொல்லிவிட்டு, இந்த 'தூல்' இவளுக்குப் போதும்தானே? என்பது போல் வாணி மஞ்சரியையே பார்க்க அவள் சொல்லியது உண்மை என்று நம்பி, அவள் நினைத்தது போல் துள்ளிக் குதிக்காத குறையாய் குதூகலித்தாள் அவள்.

"அத்தான்... என்றால்... சத்யம் அத்தான் தான்! என் மேல் அவர் வைத்திருக்கும் பாசமே... தனி.. ஸோ... ஸ்வீட்... அவர்..." என அத்தோடு நில்லாது உதடுகளைக் குவித்து காற்றில் ஒரு முத்தத்தை வேறு ப்ளையிங்காக அவள் பறக்க விட.. சத்யேந்திரன் 'லூசு' என மிகச் சரியான பெயரை இவளுக்கு வைத்திருக்கிறான். அதற்காகவே அவனைத் தனியாய் பாராட்ட வேண்டும்...' என நினைத்துச் சிரித்தாள் வாணி.

ஒருவாறு அதற்குப்பின் வந்த இரண்டுநாட்களும் மஞ்சரி அடிக்கும் கூத்திலே சுவாரஸ்மாய் கழிந்தது. வாணி அவளது புகழ்ச்சியை விரும்பும் அந்த மன நிலையை சரியாய் புரிந்து கொண்டு தினமும் அதன்படியே பேசினாள்.

மறுநாள் பூரணி அம்மாள் அவளைத்தேடி வந்துவிட்டாள். பூரணி அம்மாள் அன்று கேட்ட விஷயம் நிஜம்மாகவே அவளைத் தூக்கி வாரிப் போட்டது.

"வாணி... ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் மட்டும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது..."

"என்ன சந்தேகம் அம்மா?"

"நீ... அவன் மீது ஒன்றும் ஆசையில்லை. ஒரு வித உறவும் கிடையாது என்று சொல்லிவிட்டாய். ஆனால்..."

பூரணி அம்மாள் இழுக்க பதட்டமானாள் வாணி.

"ஆனால்... என்னம்மா...?"

"ஒரு வேளை... அவன் சத்யேந்திரன் உன்னை விரும்புகிறானா? அவனுக்கு உன் மீது ஆசை இருக்கிறதா...? அது... அப்படி எதுவும் உண்டா... என உனக்குத் தெரியுமா?"

பூரணி அம்மாள் அடுக்கிக் கொண்டே போய் கேட்க... பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கத்தான் செய்தாள் வாணி.

"என்னம்மா...கேட்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லை..." என்றாள் அதே விழிப்புடன்.

"அதாவது வாணி, நான் ஏன் இப்படிக் கேட்கிறேன் என்றால் எனக்குத் தெரிந்து அலுவலகத்தில் அவனுடன் இருக்கும் ஒரே பெண் நீதான்! வேறு யாரும் இல்லையே... அதனால். அதனாலே... கேட்கிறேன்... அவன் சொன்ன அழகான பெண்... அந்த முட்டாள்.. ஒரு வேளை நீ... நீயாகத்தான் இருக்குமா?"

பூரணி அம்மாள் கேட்க பொட்டிலடித்த மாதிரி இருந்தது வாணிக்கு. இந்த பூரணி அம்மாள் தான் எப்படி யோசிக்கிறார்கள்? அவள் கூட இப்படி யோசிக்கவில்லையே!

பூரணி அம்மாள் சொல்வது போல் சத்யேந்திரனுடன் இருக்கும் ஒரே



பெண் வாணிதானே! அப்படியானால் அவள்தான் அந்த முட்டாளா?

ஆனால் அப்படி நினைக்கும் போதே இன்னொரு விஷயம் அவளைத் தடுத்தது.

சத்யேந்திரன் வெறும் அலுவலகத்தில் மட்டும் அடைந்து கிடக்கிற ஆள் இல்லையே! அடிக்கடி வெளியூர், மீட்டிங், பார்ட்டி என சுத்துகிறவன் ஆச்சே! அங்கு எத்தனையோ பெண்களை சந்திக்கக் கூடும். அவர்களில் யாரேனும் கூட அவன் மனங்கவர்ந்த அந்த அழகிய முட்டாளாய் இருக்கலாம் அல்லவா?

தனக்கு எழுந்த சந்தேகத்தை அப்படியே பூரணி அம்மாளிடம் கொட்டினாள் வாணி.

பூரணி அம்மாளும் அவள் நினைப்பை ஆமோதிக்கத்தான் செய்தாள் கூடவே இன்னொரு விளக்கத்தையும் கொடுத்தாள்.

"நீ சொல்கிறபடி நடக்கவும் வாய்ப்பிருக்கிறது வாணி. ஆனால் அதைவிட முதலில் உன் விஷயத்தை நாம் தெளிவாய் தெரிந்து கொள்ள வேண்டும். சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்..."

"என் விஷயத்திலா?"

வாணி திடுக்கிட பூரணி அம்மாள் மெல்ல தலையாட்டினாள்.

"அதாவது சத்யேந்திரன் மனதில் உன்னை வைத்திருக்கிறானா? உன்னை விரும்புகிறானா என்பதை தெளிவாய் கண்டுபிடித்து விட வேண்டும்..."

பூரணி அம்மாள் சொல்ல அதை ஆமோதிப்பவளாய் பலமாய் தலையாட்டினாள் வாணி. அவளுக்கு அம்மாள் சொன்னதிலே இந்த ஒரு விஷயம்தான் பிடித்திருந்தது.

சொல்லப்போனால் கடந்த பத்து நாட்களாய் இந்தக் கேள்விக்கு விடை தெரியாமல்தானே அவளே தவித்துக் கொண்டிருக்கிறாள்? இரவு தூக்கம் வராமல் இந்த விஷயம்தானே அவளை இம்சிக்கிறது? அதற்கு விடை கிடைத்து விட்டால்தான் போதுமே!

"நீங்கள் சொல்வது நல்ல யோசனையாய் இருக்கிறது... அப்படியே செய்வோம்...!" என்றாள் உற்சாகமாக.

பூரணி அம்மாள் முகம் மேலும் சிந்தனைக்குப்போனது.

"வாணி... இதில் சத்யேந்திரின் மனதைக் கண்டுபிடிக்க நான் ஒரு நல்ல யோசனை வைத்திருக்கிறேன். ஆனால்..."

பூரணி அம்மாள் தயக்கமாய் இழுக்க அவளை அவசரப்படுத்தினாள் வாணி...

"ஆனால்... என்னம்மா...? எதுவானாலும் தயங்காமல் விஷயத்தைச் சொல்லுங்கள்..." என்றாள்.

பூரணி அம்மாள் இன்னும் முழுத்தயக்கம் நீங்காதவளாய், "அதற்கு இந்த ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. இதை விட்டால் வேறு வழியும் இல்லை வாணி..." என பீடிகையும் இட்டாள்.

"சும்மாச் சொல்லுங்கள் அம்மா... நான் செய்கிறேன்..." என்றாள் வாணி உற்சாகம் குறையாமல் அதே பரபரப்புடன்.

"அதாவது வாணி இந்த விஷயத்தில் சத்யேந்திரன் மனதை வெளிக்காட்டாமல் சரியான கல்லூரிமங்கனைப் போல் இருக்கிறான். அவன்

உண்மையில் உண்மை விரும்புகிறானே... என்பதைக் கண்டுபிடிக்க... நீ வேறு ஒன்று செய்ய வேண்டாம் சும்மா... ஒரு நடிப்பு... அதுவும் அவன் முன்னிலையில் அவன் பார்க்கும்போது நடித்தால் போதும்..."

"என்ன சொல்கிறீர்கள்... நடிப்பா? அதுவும் சத்யேந்திரன் முன்னிலையிலா...?"

திகைத்துப் போய் வாணி கேட்க படபடவென தன் திட்டத்தை விவரிக்க ஆரம்பித்து விட்டாள் பூரணி அம்மாள்.

அவள் விவரிக்க... விவரிக்க... அவள் திட்டம் முழுவதையும் கேட்ட வாணி அப்படியே ஆடித்தான் போனாள்.

பூரணி அம்மாளை எவ்வளவு பெரியவர்களாய் உயர்ந்த ஸ்தானத்தில் அவள் வைத்திருந்தாள்? அவர்களா இப்படி சினிமாத்தனமாய் சினிமாவில் நடப்பதைப் போல் ஓர் திட்டத்தை தீட்டுவது...? அதுவும் சொந்த மகளிடமே இப்படியொரு நாடகத்தைப் போட்டு உண்மையைக் கண்டு பிடிக்கவோ?

பூரணி அம்மாள் முழுவதையும் கூறி முடித்ததையும் அதைக் கேட்டு அப்படியே அதிர்ந்து போனவள், பிடிவாதமாய் அதை மறுக்கத்தான் நினைத்தாள்.

ஆனால் அவளது இதயத்தில் ஒலிக்கும் அந்தக் கேள்வி, சத்யேந்திரனின் காதலி யார்... என தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற துடிப்பு, ஆர்வம்... எல்லாம் அவளை நிலைகொள்ளாமல் தவிக்கவிட்டது.

கடைசியில் வரப்போகும் ஆபத்துக்களைத் தெரிந்தே, அறிந்து கொண்டே பூரணி அம்மாளின் விபரீதத் திட்டத்திற்கு சம்மதம் தெரிவித்தாள் வாணி.

✪✪✪

## 9

வாணிக்கே அது பெரும் ஆச்சரியம்! எப்படி நாம் பூரணி அம்மாளின் அந்த விபரீதத் திட்டத்திற்கு சம்மதம் சொன்னோம் என்று.

ஆனால் அதை ரொம்பவும் யோசித்துப் பார்த்துதான் சொல்லியிருந்தாள்.

இந்த விஷயத்தில் பூரணி அம்மாளின் நோக்கமும் அவளது நோக்கமும் ஒன்றுதான்.

சத்யேந்திரனின் மனதில் மஞ்சரி இல்லையென்று இருவருக்கும் தெரிந்துவிட்டது.

அதேபோல் வாணி. அவள் மனதில் இருக்கிறாளா, அவன் சொல்லும் அழகிய முட்டாள் அவள்தானா... இல்லை வேறு யாருமா? என்றெல்லாம் தெரிந்தாக வேண்டும்!

வாணியும் தான் எத்தனை நாட்கள் இந்தக் கேள்வியை வைத்துக்கொண்டு விடை தெரியாமல், தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருப்பாள். கூடவே அவளுள் இன்னொரு யோசனையும் துளிர் விட்டது.

சத்யேந்திரன் தன்னை விரும்புகிறானா... என்று அறிந்து கொள்ளத்துடிக்கிறாளே... அப்படியானால் அவன் அவளை விரும்புகிறானா?

இந்தக் கேள்வி அவளுள் எழுந்தபோது முதலில் அவர் தன்னை விரும்புகிறாரா? என்பதைத் தெரிந்து கொள்வோம் என நினைத்தாள்.

கூடவே, இன்னொரு கேள்வியும் அவளைத் தாக்கியது.

சரி, அவர் சத்யேந்திரன் ஒரு வேளை அவளைத்தான் விரும்புகிறார்... அவள்தான் அந்த இனிய முட்டாள் என்று உறுதியாகி விட்டால்... அவள் என்ன செய்வாள்?

அவளும் பதிலுக்கு சத்யேந்திரனை காதலிக்க ஆரம்பித்து விடுவாளா?

அதாவது... அவர் காதலித்தால்... இவளும் காதலை ஆரம்பித்து விடுவாளா? இவளுக்கென்று தனியே உணர்வு, புத்தி என எதுவும் கிடையாதா?

ஏவுகணைகள் போல் கேள்விகள் தாக்க எல்லாவற்றையும் தன் அழகான தலையை சிலுப்பியபடி அடக்கினாள் வாணி.

முதலில் சத்யேந்திரன் தன்னை விரும்புகிறாரா? என தெரிந்து கொள்வோம். அதன்பின் மற்றவற்றைப் பார்ப்போம் என முடிவும் எடுத்தாள்.

பூரணி அம்மாள் அவளிடம் விவரித்த திட்டமும் பயங்கரமாய்த்தான் இருந்தது.

அதாவது சத்யேந்திரனின் மனதை அறிய அவள் இன்னொருவரை விரும்புவது போல் காதலிப்பது போல் நடிக்க வேண்டும். வெறும் நடிப்புத்தான்! அப்படி நடித்தால் தான் சத்யேந்திரன் அவன் உள்மனதை திறந்து உண்மையைச் சொல்லுவான்? அவன் யாரை காதலிக்கிறான் என்பதை கண்டுபிடிக்க முடியும்.!

சரி... நடித்து விடலாம்...!

ஆனால்... யாரை காதலிப்பது போல் நடிப்பது? அப்படி நடிக்கும் காதலன் ஓரளவு நல்லவனாக இருக்க வேண்டுமே? இல்லை அப்படி ஓர் நடிப்பு நடிப்பதை சத்யேந்திரனும் உண்மை என்று நம்ப வேண்டுமே?

திகைத்த வாணிக்கு பூரணி அம்மாள் எல்லாவற்றிற்கும் சரியான ஆளையும் திட்டத்தையும் வைத்திருப்பது ஆச்சரியத்தையே ஏற்படுத்தியது.

பூரணி அம்மாளுக்கு சிறு வயது முதலே அறிந்த தோழி ஒருவள் இருக்கிறாளாம். அவளுக்கு ஒரே மகனாம் பெயர் கூட முரளிதரனோ... என்னவோ...வாம். அவன் தனியார் கம்பெனி ஒன்றில் குமாஸ்தாவாம். ரொம்பவும் சாதுவான பயந்த சுபாவமாம். அவன் பூரணி அம்மாளுக்காக எது வேண்டுமானாலும் செய்வானாம்... அவனைத்தான் வாணிக்கு காதலனாக நடிக்க தேர்ந்தெடுத்திருந்தாள் பூரணி அம்மாள்!

வாணி தன் அழகான புருவம் உயர ரொம்பவும் யோசிப்பதைப் பார்த்த பூரணி அம்மாள், "நீ ... ஒன்றும் பயப்படத் தேவையில்லை வாணி. பையனைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். ரொம்பவும் சாதுவான பையன். வெறும் நடிக்க மட்டும்தான் செய்வான். மற்றபடி அவன் விரல் நுனி கூட உன்மேல் படாது. எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ சம்மதம் சொன்னால் மட்டும் போதும்..." என பூரணி அம்மாள் தைரியம் கொடுக்க வேறு வழி தோன்றாமல்

தலையை ஆட்டத்தான் செய்தாள் வாணி. கூடவே அவளுக்கு இன்னொரு சிந்தனையும் திடீரென தோன்றியது.

அதையும் தாமதிக்காமல் பூரணி அம்மாளிடமே கேட்டாள். "அம்மா, நீங்கள் இப்படி கஷ்டப்பட்டு, நானும் இப்படியெல்லாம் நடித்து உண்மையை கண்டுபிடிப்பதை விட பேசாமல் சத்யேந்திரனைக் கூப்பிட்டு அவன் காதலிப்பது யார்? என கறாராய் விசாரித்து விடலாமே! உங்களுக்கு இல்லாத உரிமையா?"

வாணி கேட்க அதற்கு பூரணி அம்மாள் வேறு விதமாய் சைகை செய்து தலையாட்டினாள்.

"நீ... சொல்லும் வழி... ரொம்பவும் எளிது. விரட்டிக் கேட்டால் சத்யேந்திரனும் சொல்லிவிடுவான். ஆனால், அதன்பின் எனக்குத்தான் சங்கடமாய்ப் போய்விடும்."

"என்னம்மா சொல்கிறீர்கள்? உங்களுக்கு சங்கடமா?"

"ஆமாம் வாணி, எனது முக்கிய நோக்கம் சத்யேந்திரனின் மனதில் இருக்கும் பெண் யாரென்பது கண்டுபிடிப்பது... அது அவள் மஞ்சரி இல்லையென்றால் அவனது காதலை தடுப்பதுதான்...! இப்போது நான் போய் வெளிப்படையாய் விரட்டினால், இந்தப் பெண்ணைதான் விரும்புகிறேன். இவளை எனக்கு கட்டி வையுங்கள்.. என வெளிப்படையாய் உடைத்துவிடுவான். பின் என் நிலைமைதான் சங்கடமாய் போய்விடும். அதனாலே விஷயத்தை அவனுக்குத் தெரியாமலே கண்டுபிடித்து அவன் அறியாமல் அவனது காதலை உடைக்க வேண்டும்...! இதுதான் நான் விரும்புவது...!"

வாணிக்கு எல்லாம புரிந்தது.

ஆனால் பூரணி அம்மாள் இன்னமும் விளக்கினாள்.

"அதாவது வாணி.. சத்யேந்திரன் எப்படியும் மஞ்சரியைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் விட்டுப்போன எனது உறவுச் சொந்தங்கள் எல்லாம் இத்திருமணத்தின் மூலம் இணைய முடியும். அதுதான் எனது இப்போதைய லட்சியமும் கூட. அதனாலே சத்யேந்திரன் வேறு யாரையும் காதலித்துவிடக் கூடாது. அப்படி காதலித்தாலும் அவன் மனதை மாற்றி விட வேண்டும் என முயற்சியெடுத்து வருகிறேன்... இப்போது உனக்குப் புரிகிறதா?"

"புரிகிறது..."

பலமாய் தலையாட்டினாள் வாணி.

"அப்படியானால்... நாம் திட்டம் செய்து நாளையே அந்த காதல் நாடகத்தை அரங்கேற்றி விடுவோமா?"

பூரணி அம்மாள் கேட்க அப்படியே திடுக்கிட்டாள் வாணி.

"என்ன நாளையேவா... என் சொல்கிறீர்கள்?"

'ஆமாம் வாணி இதிலெல்லாம் தாமதிக்கவோ காலம் கடத்தவோ கூடாது ஏனெனில் விஷயம் அப்படி'

கொஞ்சம் நேரம் கண்கள் விரிய யோசித்த வாணி மறுகணம் பலமாய் தலையசைப்பு செய்தாள்.

"சரிம்மா...! நீங்கள் சொன்னபடியே நடந்து கொள்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?" என்றாள்.



பூரணி அம்மாள் தன் திட்டத்தை தெளிவாய் விவரிக்க ஆரம்பித்தாள்.

அதன்படி மறுநாள் மாலை அலுவலகம் முடிந்ததும் அவள் கிங்ஸ் சர்க்கிளில் உள்ள ஃபாஸ்ட் புட் ரெஸ்டாரண்டிற்கு செல்ல வேண்டும். அங்கு தயாராய் அவளுக்காக பூரணி அம்மாளால் ஏற்பாடு செய்யப்பட்ட நடிப்புக் காதலன் முரளிதரன் காத்துக்கொண்டிருப்பான்.

வாணி அவனுடன் அமர்ந்து காதலர்கள் போல் பேசிச் சிரித்து நடிக்க வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு நாள் மாலை ஆறு மணிக்கும் சத்யேந்திரன் தவறாமல் அந்த ஹோட்டலுக்கு வருவது வழக்கம். அதனால் காதல் ஜோடியாய் நடிக்கும் அவர்கள் இருவரும் அவன் கண்ணில் படும்படி நடந்து கொள்ளவேண்டும். அதைப் பார்த்து சத்யேந்திரன் அப்படியே அதிர்ச்சியாக வேண்டும்..."

பூரணி அம்மாளின் திட்டம் என்னவோ கேட்க நன்றாகத்தான் இருந்தது.

ஆனால் வாணிக்கு திருப்தி வந்தபாடில்லை.

"சரிம்மா.. இப்படி நடந்தால்.. என்ன நடக்கும்? சத்யேந்திரன் என்ன செய்வான்?"

பூரணி அம்மாள் கடகடவென சிரிக்க ஆரம்பித்து நிறுத்தினாள்.

"அட... என்ன வாணி இப்படிக் கேட்கிறாய்...? அவன் உண்மையில் உன்னைத்தான் காதலிக்கிறான் என்றால் உன்னை அந்த கோலத்தில் பார்த்தால் துடித்துப் போகமாட்டான்? அப்படி அவன் துடித்து ஆவேசப்பட்டால் உண்மை தெரிந்து விடுமே?"

"சரி அப்படி சத்யேந்திரன் என்னை விரும்பவில்லை என்றால் என்ன நடக்கும்? எப்படி கண்டுபிடிப்பது?"

வாணி கேட்க அதற்கும் பூரணி அம்மாள் தயாராய் வைத்திருந்தாள்.

"அது ரொம்பச் சுலபம்தானே? உண்மையில் அவன் மனதில் நீ இல்லாவிட்டால் அவன் என்ன செய்வான்? நீ இன்னொரு ஆணுடன் பழகுவதைப் பார்த்து அவனுக்கு கோபம் வராது. நீ எக்கேடும் கெட்டுப்போ... என அவன் பாட்டுக்குச் சென்று விடுவான்..."

பூரணி அம்மாள் சர்வசாதாரணமாய்ச் சொல்ல வாணிக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. ஒருவேளை இப்படி நடிப்பதால், தன்னைப் பற்றி கண்டவனுடன் சுத்தும் கேஸ் என மிக கேவலமாக கூட சத்யேந்திரன் எடை போட்டுவிட வாய்ப்பிருக்கிறதே!

ஆனால் வேறு வழியில்லை. பூரணி அம்மாளின் நச்சரிப்பிற்காகவாது அவள் இதையெல்லாம் செய்தாக வேண்டும்!

எல்லாவற்றுக்கும் சம்மதம் சொல்லிவிட்டு பலத்த யோசனையுடன் கிளம்பினாள் வாணி.

அன்று இரவு முழுவதும் அதே சிந்தனையில் இருந்துவிட்டு மறுநாள் 'காதலி'போல் நடிப்பதற்கு தயாராகி விட்டாள்.

சும்மாவாக ஒரு ஆணுடன் ரெஸ்ட்டாரண்டில் உட்கார்ந்து பேசப் போகிறோம். அடிக்கடி பல்லை காட்டி நாலைந்து இளிப்பு இளித்தால் போதும். பார்ப்பவர்களுக்கு 'காதலர்கள்' என்ற முத்திரை விழுந்து விடும். மற்றபடி அவள் தப்பு எதுவும் செய்யப் போவதில்லை...!

## 10

அன்றைய அலுவலக இடைவேளையின் போதும் பூரணி அம்மாள் ஞாபகமாய் தொலைபேசியில் அவளை அழைத்து திட்டத்தை உறுதி செய்தாள்.

திட்டப்படி சரியாய் ஆறுமணிக்கு ரெஸ்ட்டாரண்டில் அவளுக்காக முரளிதரன் காத்திருப்பான் எனவும்' தெரிவித்தாள்.

நேரம் விரைய வாணிக்கு அவளையறியாமல் ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டது. இருந்தாலும் எல்லாவற்றையும் மறைத்துக்கொண்டு சாதாரணமாகவே நடமாடினாள்.

அலுவலகம் முடிந்ததும் கிளம்பி அந்த ரெஸ்ட்டாரண்டை கண்டுபிடித்து நடந்தாள். பூரணி அம்மாள் சொன்னபடியே அவன் ஏற்பாடு செய்திருந்த முரளிதரன் முன் இருக்கையொன்றில் காத்திருந்தான்.

ஒல்லியாய் தட்டைக்குச்சி போல் பயந்த சுபாவத்துடன் இருந்த அவனைப் பார்த்ததும் வாணிக்கு சிரிப்புதான் பொங்கியது.

இவன் அவள் காதலனா?

பூரணி அம்மாளைச் சும்மாச் சொல்லக்கூடாது. சரியான அவள் பயப்படத் தேலவயில்லாத சோப்ளாங்கி ஒருவனைத்தான் அவள் காதலனாக நடிக்கச் சொல்லியிருக்கிறார்கள்!

ஆனால் சத்யேந்திரன் இதை நம்புவானா?

நாடகம் போடுகிறார்கள் என கண்டுபிடித்து விடுவானா?

யோசித்தவள் ஒரு விஷயத்தில் உறுதியாய் இருந்தாள்.

அவனை எப்படியாவது நம்ப வைக்க வேண்டும்! அப்படிச் செய்தால்தான் அவனது உண்மை நிலையை கண்டுபிடிக்க முடியும்? உண்மையில் அவன் தன்னை காதலிக்கிறானா? என்கிற தலை போகிற கேள்விக்கு பதிலைத் தெரிந்து கொள்ள முடியும்!

முரளிதரன் அவளைப் பார்த்து நடுங்காத குறையாகத்தான் எழுந்து வணக்கம் சொன்னான்.

பூரணி அம்மாள் சொல்லியிருப்பதாலே கொஞ்ச நேரம் உட்கார்ந்து அப்படி நடிக்க ஒப்புக்கொண்டதாகவும் சொன்னான்.

அவனே கையில் வைத்திருந்த செல் மூலம் பூரணி அம்மாளிடம் வாணி வந்து விட்டதை சொல்லிவிட்டு அவளிடம் பேசக் கொடுத்தான்.

வாணி செல்லை வாங்க மறுமுனையில் பூரணி அம்மாள் உற்சாகமாக பேச ஆரம்பித்து விட்டாள்.

"வாணி இன்னும் அரைமணி நேரத்தில் வழக்கம் போல் அங்கு சத்யேந்திரன் வந்து விடுவான். நீ உடனே நடிக்க ஆரம்பித்து விடு. நாம் உண்மையை உடனே கண்டுபிடித்து விடலாம். அப்புறம் அந்த முரளிதரன் கொஞ்சம் பயந்த பையன்தான். நீதான் தைரியம் கொண்டு நடிக்க வேண்டும். இன்னொன்றையும் ஞாபகம் வைத்துக்கொள். சத்யேந்திரன் நம் நடிப்பை நம்ப



வேண்டும். அப்போதுதான் நம் திட்டம் வெற்றி அடையும்..."

பூரணி அம்மாள் சொல்லிக் கொண்டே போக எல்லாவற்றையும் ஆமோதித்து அப்படியே நடப்பதாய் கூறி பேச்சை முடித்தாள். நாய் வேஷம் போட்டாயிற்று. இனி குரைப்பதைத் தவிர வேறு வழியில்லையே...? என நினைத்தவள் வேறு வழி தோன்றாது முரளிதரனுக்கு பக்கத்து இருக்கையில் அமர்ந்து தலையைச் சாய்த்து மும்முரமாய் பேசுவது போன்ற பாவனையை ஆக்கிக் கொண்டாள்.

முரளிதரன் அவளிடம் என்ன பேசுவதென்று தெரியாமல் திருதிருவென விழிக்கத்தான் செய்தான். வாணிதான் அவன் அலுவலகம் பற்றி அவன் பார்க்கும் வேலை பற்றியெல்லாம் கேட்டுக் கொண்டு... அடிக்கடி சிரித்துக் கொண்டு காதலி போன்ற தோற்றத்தை கஷ்டப்பட்டு உருவாக்க வேண்டியிருந்தது.

ஆனால் சரியாக ஆறரை மணிக்கு ரெஸ்ட்டாரண்ட் உள்ளே வந்த சத்யேந்திரன் அவர்களது காதலர்கள் கோலத்தைப் பார்த்து வெகுண்டு வாணியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிடவும் செய்தான்.

ஜிவு ஜிவுவென சிவந்த முகமாய் அனல் கக்கும் பார்வையோடு மேலும் மேலும் முறைத்துக் கொண்டிருந்தான்.

வாணிக்கு அவன் கோபத்தைக் கண்டு பயம் வரவில்லை.

நாம் இன்னொருவனிடம் பேசி இளிப்பதைக்கண்டு இவனுக்கு கோபம் வருகிறதா? அதற்காகத்தான் துடிக்கிறானா...? அப்படியானால்... அப்படியானால்...?

அவள் அவன் கோபத்தின் உள்ளர்த்தத்தை யோசித்துக் கொண்டிருக்க... அவன் வெடித்தான்.

"என்ன... நினைத்துக்கொண்டிருக்கிறாய்... நீ?"

கோபாவேசமாய் வெடித்தவன் அத்தோடு நிறுத்தாமல் பட்டென ஓங்கி அறையவும் செய்தான்.

செவிட்டில் சுரீரென ஒரு வலி இறங்கியபோது அவள் அதை எதிர்பார்க்கவில்லை. அதிரத்தான் செய்தாள்.

என்ன... செவிட்டில் அடிக்கிறனா? நம் செவிட்டில் அடிக்குமளவுக்கு உரிமையை யார் இவனுக்கு கொடுத்தது...? அத்தனை பேர் முன்னிலையில் நாகரிகம் தெரியாமல் காட்டுமிராண்டி போல்...?

அவளும் வெகுண்டு போனவளாய் சினமாய் அவனை முறைக்க... அவனோ அதை கொஞ்சமும் சட்டை செய்யாமல் அவளை எச்சரிப்பது போல் சுட்டு விரலைக் காட்டியவன்... அப்படி எச்சரித்து விட்டு விறுவிறுவென திரும்பி ரெஸ்ட்டாரண்டை விட்டு வெளியேறிவிட்டான்.

வாணிக்கு ஒரு கணம் ஒன்றும் ஓடவில்லை. அவன் பாட்டுக்கு வந்தான். அவளை ஒரு அடி கோபமாய் அடித்தான், என்ன நடப்பதென்பதை அவள் உணர்வதற்குள் விறுவிறுவென சென்று விட்டான்.

அடியை எதிர்பார்க்காததால் அவள் செயலற்று நிற்க... எதிரில் இருந்த முரளிதரன் நிலைமையோ வேறு மாதிரி இருந்தது. எங்கேயும் தன்னையும் சத்யேந்திரன் அடித்து விடுவானோ... என்று கன்னத்தை பிடித்தபடி எழுந்தவன்

அதே பயத்துடன் திரும்பி விடுவிடுவென அவனும் அகல ஆரம்பித்து விட்டான்.

கொஞ்ச நிமிடங்களில் அவளை அடித்தவனும் இல்லை. எதிரில் இருந்தவனும் இல்லை. அவள் மட்டும் தனியாக பேந்தப் பேந்த விழித்தபடி.

அவன் அப்படி சுளீரென அடித்ததும் படீரென வலித்து சினம் வந்ததே தவிர.. அவன் அடித்ததற்கான அவள் துடிக்கவில்லை. பொலபொலவென கண்ணீர்த் துளிகளை சிதறவிடவில்லை.

அப்படி அவன் ஆவேசப்படவேண்டும் என்று அவள் எதிர்பார்த்து இருந்ததால் என்னவோ... அவன் அடித்தும் அவளுக்கு சுரனை வரவில்லை என்றுதான் சொல்லவேண்டும்!

இல்லையென்றால்... ஒருவன் செவிட்டில் அடிக்கும் வரை அவள் என்ன பார்த்துக் கொண்டா இருப்பாள்...?

மற்றவர்களையும், தன்னையே வினோதமாய் பார்க்கும் பார்வைகளையும் கொஞ்சமும் சட்டை செய்யாது ஹேண்ட் பேக்கை எடுத்தவாறு ரெஸ்ட்டாரண்டை விட்டு வெளி வந்தாள்.

அவளது கை விரல்கள் மிருதுவான அவளது கன்னக் கதுப்புகளை தடவியது.

ஓங்கிதான் அடித்திருக்கிறான்! அடித்த விரல் தடம் கூட பதிந்து விட்டதா?

வருடியவளுக்கு மின்னல் கீற்றாய் சிந்தனைகளும் ஒளிர்ந்தன.

சத்யேந்திரன் துடித்து சினம் வந்து அவளை அடைத்திருக்கிறான்.

அப்படியானால்...?

அவன் அடித்ததற்கு என்ன அர்த்தம்?

பூரணி அம்மாள் சொன்னது போல் இன்னொரு ஆணுடன் பார்த்ததும் துடித்து வெகுண்டு அவனுக்கு கோபம் வருகிறதே... அப்படியானால்...? அவன் அவளை விரும்புகிறானா? அவன் விரும்பும் அந்த அழகான இனிய முட்டாள் அவள்தானா? அதனால்தான் அவன் அவ்வளவு கோபப்படுகிறானா?

அவள் அப்படி சிந்திக்க... அந்த நினைப்பே அவளுக்கு புதுவிதமான ஒரு மனநிலையை ஏற்படுத்தியது.

அதற்குள் முரளிதரன் விஷயத்தைச் சொல்லி, பூரணி அம்மாளும் அவள் செல்போனுக்கு அடித்துவிட வாணி... போனை எடுத்தாள்.

மறுமுனையில் உற்சாகமாய் பூரணி அம்மாள்!

" வாணி நான் நினைத்த மாதிரியே ஆகிவிட்டது. பார்த்தாய் அல்லவா? சத்யேந்திரன் உன்னை கோபப்பட்டு அடித்து விட்டானாமே? அப்படியானால் புரிந்துவிட்டதா? சந்தேகமில்லாமல் அவன் மனதில் இருப்பது நீதான்! அவன் காதலிப்பது நீதான்!"

படபடவென பூரணி அம்மாள் சொல்லிக்கொண்டு போக... இது... இது... நிஜம்மா... நடப்பதெல்லாம் உண்மையா? என நம்ப முடியாமல் குழம்பத்தான் ஆரம்பித்தாள் வாணி.

அதற்குப் பின் பூரணி அம்மாள் என்னென்னவோ சொல்லிக் கொண்டிருக்க... அது எல்லாம் அவள் காதில் விழுந்த மாதிரித் தெரியவில்லை.



அவள் பாட்டுக்கு யதேச்சையாய் 'உம்' கொட்டி விட்டு வேறு ஏதோ ஒரு உலகத்தில் இருந்தாள்.

மனதில் குளிர்ச்சியாய் மென்மையான உணர்வுகள் எழும்பி அவளை ஆட்கொண்டது. வேகமாக குளம்பொலி ஒலிக்க புழுதியைப் பரப்பியபடி புரவியொன்று வருகிறது. புரவியில் ராஜகுமாரனாய் சத்யேந்திரன். அவள் பக்கம் வந்து அலாக்காய் அவளைத் தூக்கி குதிரையில் ஏற்றி நெஞ்சோடு பிடித்துக்கொள்கிறான்.

'என்ன கண்மணி இப்போது புரிந்து விட்டதா? அந்த அழகான இனிய முட்டாள் நீதான்!' என்கிறான். அவளும் அந்த வார்த்தைகளில் கிறங்கி மை விழிகளை விரித்து சொக்கியபடி, தலையை அப்படியும் இப்படியுமாய் ஆட்டிக் கொண்டிருக்கிறாள்.

சட்டென நிஜத்திற்கு வந்தபோது ரோட்டில் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டு அவள் தலையை மட்டும் ஆட்டிக்கொண்டிருப்பது புரிந்தது. என்ன இது கிறுக்குத்தனம்! இனி தலையை விரித்துக் கொண்டு ஆட வேண்டியதுதான் பாக்கி!

தன்னைத்தானே நொந்து, சிரித்து, கட்டுப்படுத்திக் கொண்டவளாய் பஸ் ஏறினாள். அன்றைய இரவும் அவளுக்கு தூக்கமில்லாமலே பரபரப்புடன் கழிந்தது.

ஆக... இவ்வளவு நாள் மண்டையைக் குடைந்த விஷயத்திற்கு விடை தெரிந்தாயிற்கு. சத்யேந்திரன் அவளை விரும்புகிறான். அவன் மனங்கவர்ந்த மயிலாள் அவள்தான். அவளைத்தான் செல்லமாய் அழகிய முட்டாள் என்றெல்லாம் வர்ணித்து ரஸித்திருக்கிறான்...!

சரி... அவன் காதலிப்பது நிஜமானால்... அவள் என்ன செய்யப் போகிறாள்?

பதிலுக்கு அவளும் காதலிக்கப் போகிறாளா?

அவன் காதலித்தால் அவளும் காதலித்து விட வேண்டுமா?

அவளுக்கென சொந்தமாய் உணர்வு, மூளை என ஒன்றுமே கிடையாதா?

கிளிப்பிள்ளை போல் அவன் சொன்னதைச் செய்வாளா?

இப்படியெல்லாம் யோசித்தவள் மறுகணம் நினைப்புகளை எல்லாம் அடக்கினாள்.

இப்படியெல்லாம் வீணாய் ஏன் யோசித்து குழம்ப .வேண்டும்?

முதலில் சத்யேந்திரன் இன்று அலுவலகத்தில் பார்க்கவேண்டும். அவன் அடித்ததற்கு. காரணம் கேட்க வேண்டும். அவன் உண்மையைச் சொல்லட்டும். அதன்பின் என்ன செய்வதென்று முடிவெடுப்போம்...! என நினைத்து கண்ணை இறுக மூடி தூங்க ஆரம்பித்தாள் வாணி.

ஆனால் மறுநாள் அலுவலத்தில் சத்யேந்திரன் சற்றும் கோபம் குறையாமல் அவள் முன் ஒரு ஃபைலை எடுத்து வீசினான்.

புரியாமல் விழித்தவளிடம், "பார்... இது... நீ எழுதிய அறக்கட்டளைக்கான ஆர்டர் கொட்டேஷன் ஃபைல்தானே...? அதில் ஆர்டர் கொடுத்த சூர்யா புட்ஸ் கம்பெனிக்கு செக்கில் எவ்வளவு பணம் எழுதியிருக்கிறாய்... பார்...! உன்னை அடித்ததற்கான காரணமும் அதுதான்! என்றான் சத்யேந்திரன் அதே சீறலுடன்.

✪✪✪

## 11

சத்யேந்திரன் சீறலுடன்... ஃபைலையும் அந்த செக்கையும் அவள் முன் எடுத்து வீசினான். வாணி புரியாது திகைப்புடன் குனிந்தாள்.

அந்த செக் ரசீதை எடுத்துப் பார்த்தாள். படித்துப் பார்த்தவள் ஒன்றும் புரியாதவளாய் தலையை நிமிர்த்தினாள். "சார்... சரியாகத்தானே இருக்கிறது? இதில் என்ன தப்பு...?" என்றாள் திணறலாய். அவள் திணறலாய் கேட்க வெடித்தான் சத்யேந்திரன். "என்ன... என்ன... தப்பு... என்று கேட்கிறாய்? பார்... செக்கில் தொகை எவ்வளவு என்று எழுதியிருக்கிறாய் பார்...!"

அவன் சொல்ல வாணி திரும்பவும் குனிந்து கண்களை ஓட்டியவள் அப்படியே அதிர்ந்தாள்.

கடவுளே! செக் தொகையில் அறுபதாயிரத்திற்குப் பதில் கூடுதலாக ஒரு சைபரைக் போட்டு ஆறு லட்சம் என்று எழுதியிருக்கிறாள்!

எவ்வளவு பெரிய தவறு...!

ஆறு லட்ச ரூபாய் என்று எழுதி செக்கையும் சூர்யா புட்ஸ் கம்பெனிக்கு தபாலில் அனுப்பிவைக்க பணியாளைச் சொல்லிவிட்டாளே!

நல்ல வேளையாய் கடைசி நேரத்தில் கடிதத்தை தற்செயலாய் சத்யேந்திரன் பார்த்து கண்டுபிடித்து நிறுத்தியிருக்கிறான்!

அப்படியானால்... அவன் கோபப்படுவது அவன் அடித்தது எல்லாம் இதற்காகத்தானா?

அவள் திடுக்கிட்டு நிமிர... அதே கோபக்கனலுடன் பேசினான் அவன்.

"இப்படி ஒரு பெரிய தவறை செய்து கொண்டு ஒன்றுமே நடவாதது போல் ரெஸ்ட்டாரண்டில் போய் எவனுடனோ கூத்தடித்துக் கொண்டிருக்கிறாய். அதனால்தான் பொதுஇடம் என்று கூட பாராது உன்னை அடித்தேன். இப்போது புரிகிறதா?"

"சார்... சார்... அப்படியானால்... நீங்கள்... இதற்கு இதற்குத்தான் அடித்தீர்களா?"

அவள் நம்ப முடியாமல் மறுபடியும் திக்கித் திணறி அதே கேள்வியைக் கேட்டாள்.

அவன் நன்றாக கண்களை விரித்துப் பார்த்தான்.

"இன்னும் அதில் உனக்குச் சந்தேகமா? அறுபது ஆயிரத்திற்கு ஆறு லட்சம் என்று எழுதி செக்கை பாஸ் செய்தால்... ஒரே வாரத்தில் கம்பெனியே காலியாகி விடாதா? கொஞ்சம் யோசி!"

அவன் சொல்ல... அவன் சொல்லும் உண்மை சுரீரென உரைத்தது. தவறு... அதுவும் இமாலயத் தவறுதான்! அதற்காகத்தான் அப்படி கோபப்பட்டு அவன் அடித்திருக்கிறான்! மற்றபடி அவள் நினைத்தது போல் முரளிதரனுடன் தன்னை பார்த்ததால் அவனுக்கு கோபம் வரவில்லை. அதற்காக அவன் அடிக்கவும் இல்லை.



அவள் வெகுநேரம் தலைசாய்த்து யோசிப்பதைப் பார்த்து அவன் முன்னால் வந்து கைகளைக் கட்டிக் கொண்டான்.

தான் அடித்து விட்டதற்காக அவள் ரொம்பவும் வருந்துகிறாளோ... என்ற நினைப்பு அவனுள் ஓடியது.

அதே நினைப்பில் நிமிர்ந்தவன், "ஆனாலும் அதற்காக அதீதமாக உன்னிடம் கோபப்பட்டு விட்டேன். உன்னை அப்படி நான் அடித்திருக்கக் கூடாது. ஐ... ஆம்...ஸாரி... வாணி..." என்றான் குரலை தாழ்த்தியபடி.

ஆனால் வாணி அவன் அடித்ததை நினைத்தா வருந்திக் கொண்டிருந்தாள்?

அவள் வருத்தம்... கவலை எல்லாம் வேறு!

முரளிதரனுடன் தான் இருந்ததைப் பார்த்துவிட்டு பொறுக்க முடியாமல் ஆவேசப்பட்டு அடித்துவிட்டான் என்று நினைத்தவள் அவன் சொன்ன விளக்கம் கேட்டு அப்படியே ஸ்தம்பித்துத்தான் போனாள்.

அவன் செவிட்டில் அடித்து கூட அவ்வளவாய் வலிக்கவில்லை. ஆனால் இப்போது அவன் சொன்ன காரணம் அவள் இதயத்திலே அடித்துவிட்டது.

அப்படியானால் சத்யேந்திரன் விரும்பும் நபர் அவள் இல்லையா?

அந்த அழகான இனிய முட்டாள் அவள் நினைத்தது போல்... அதுவும் அவள் இல்லையா?

நினைக்கும்பாதே இதயமே வலிப்பது போல் இருக்க அப்படியே அசைவின்றி எதுவும் பேசாது... எதுவும் தோணாது அப்படியே நின்று கொண்டிருந்தாள் வாணி.

சத்யேந்திரன் அவளையே புரியாமல் உற்றுப் பார்த்தவன் மெல்ல அவள் பக்கத்தில் வந்தான்.

"என்னவாயிற்று வாணி...?" என்றபடி அவள் தோள்களில் கைவைத்த போதும் அவளுக்கு உணர்வில்லை. அப்போதும் திக்கென வெறித்த பார்வையுடனே அசையாமல் அவள் நிற்க... அவனுக்கு அவளது நிலையைப் பார்த்து என்ன தோன்றியதோ... அப்படியே கைகளால் அவளை வளைத்தவன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டான்.

அவன் இறுக அணைத்துக் கொண்டிருப்பதை கூட உணராமல் வாணி இன்னமும் புத்தி பேதலித்தவள் போல் வெறித்த பார்வை பார்த்துக் கொண்டிருந்தவள் அவன் மெல்லதன் இதழ்களை கன்னத்தில் ஒற்றியபோதுதான் உணர்வுக்கே வந்தாள்.

யாரை நினைத்து, தன்னை அவள் காதலியாக நினைக்கவில்லை என்று மருகிக் கொண்டிருந்தாளோ அவன் அவளை இறுக அணைத்துக் கொண்டு, அவள் கன்னத்தில் உரிமையாய் முத்தமிட்டுக் கொண்டு...

இங்கு என்னதான் நடக்கிறது?

சரேலென விலகப் போனாள் அவள்.

ஆனால் சத்யேந்திரனாவது... விடுவதாவது...?

உணர்வுக்கு வந்து திமிறப் போனவளை மேலும் இறுகப் பற்றினான். நர்த்தனமாய் கைகளை அனுப்பி அவளது வளைந்த இடுப்பை அள்ளினான்.

ஐயோ... விடுங்கள்! அலறாத குறையாய் அவள் மறுபடி திமிறி,

போராடித்தான் அவனிடமிருந்து விடுபட வேண்டியதாயிற்று.

"என்ன... சார்... இப்படி அணைத்துக் கொண்டு...? ஒரு முதலாளி இப்படிச் செய்யலாமா... சொல்லுங்கள்? விடுங்கள்...!"

இம்முறை விடக்கூடாது. அவன் நோக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும் என அவள் துடித்து கேட்க... அதற்கும் சமாளித்தான் அவன்.

"அதாவது வாணி சிறுபிள்ளைகளை இப்படித்தான் யாராவது அடித்து விட்டாலோ... தண்டித்து விட்டாலோ... அவர்கள் முகம் சுருங்க வருந்த ஆரம்பிப்பார்கள். உடனே பெரியவர்கள் என்ன செய்வார்கள்...? சட்டென அவர்களை வாரியெடுத்து அணைத்து ஆறுதல் சொல்வார்கள்.

அதே போல்தான் செக்கில் நீ தவறாக எழுதி அதற்கு நான் அடித்து தண்டனை கொடுத்தது உன்னைப் பாதித்து முகம் சுருங்க வைத்து விட்டது. இப்படி சட்டென வாடிப்போய் விட்ட உன்னை ஆறுதல் படுத்தத்தான் அப்படி அணைத்து விட்டேன். நீ தவறாக என்னை நினைத்து விடாதே...!"

எல்லாவற்றையும் செய்துவிட்டு அதற்கு ஒரு விளக்கம் வேறு!

அதுவும் எப்படி?

சிறுகுழந்தையை அடித்துவிட்டு அணைப்பது போல் அவளை அரவணைக்கிறானாம். மற்றபடி வேறு ஒன்றும் இல்லையாம்!

அதை அவள் நம்ப வேண்டுமாம்!

நிமிர்ந்து அவன் கண்களையே உற்றுப் பார்த்தாள். கண்கள் பேசும். சேதி சொல்லும் என்றெல்லாம் சொல்வார்களே? என்ற ஆர்வத்தில் அவள் ஆழ்ந்து அவன் கண்களையே பார்க்க அவன் படபடவென சிரிக்க ஆரம்பித்தான்.

"அட... உன் மைவிழிக் கண்களுக்கு இவ்வளவு சக்தியா? அது என்னிடம் பேசுகிறதே வாணி..." என்று சொல்ல அவள் திடுக்கிடத்தான் செய்தாள்.

அவன் கண்கள் என்ன சொல்கிறதென்று பார்க்கப் போனால் அவளது கண்கள் பேசுவதாக அல்லவா... புதிர் போடுகிறான்?

குனிந்து தனது விரல்களால் செல்லமாய் அவள் கன்னத்தை தட்டிவிட்டு அதே சிரிப்புடன் அவன் அகல... பிரமை பிடித்தாற்போல்தான் நின்றாள் அவள்.

✪✪✪

## 12

சில நேரங்களில் நாம் நினைத்ததும் நடக்கும். நினைக்காததும் நடக்கும். அதே போல்தான் வாணி விஷயத்திலும் நடந்தது.

அவள் பூரணி அம்மாளின் இந்த யோசனைக்கு என்ன ஆனாலும் சரி சம்மதிக்க கூடாது... சம்மதிக்கவே கூடாது..என பிடிவாதமாய்த்தான் இருந்தாள்.



ஆனால் பூரணி அம்மாளின் கெஞ்சல் அந்த உருக்கமான பேச்சு அவள் நிலையை மாற்றிக் கொள்ளும்படி ஆயிற்று. என்ன இருந்தாலும் வயதில் அவ்வளவு பெரியவர்கள், பணமும் செல்வாக்கும் உடையவர்கள், என் மகனை விட்டுக்கொடு... என் சொந்தங்கள் எனக்கு வேண்டும் என்று சொல்லும் போது அவள் எப்படி மறுக்க முடியும்?

ஆனாலும்... இந்தப் பூரணி அம்மாளும் கெட்டிக்காரிதான். அவளிடம் விரட்டியோ, மிரட்டிப்போய் பேசினால் எதிர்த்து மல்லுக்கு நின்று விடுவாள் என்பதை உணர்ந்து கெஞ்ச அல்லவா செய்கிறாள். சரியான திட்டத்தையும் வழியையும் போட்டு வைத்திருந்தாள் பூரணி அம்மாள்.

அத்திட்டப்படி. அவள் சத்யேந்திரனிடம் பார்க்கும் செகரட்டரி வேலையை உதறித்தள்ள வேண்டும்.

திடீரென வேலையை ராஜினாமா செய்ய வேண்டும்.

சத்யேந்திரன் லேசில் விடுவானா? காரணம் கேட்பானே? என்ன காரணம் சொல்வது?

அதற்கும் பூரணி அம்மாள் தயாராய் பதில் சொல்லிக் கொடுத்திருந்தாள்.

வேறொரு... கம்பெனியில் இதைவிட அதிக சம்பளம் தருவதால் அங்கு செல்வதாக அவள் கூற வேண்டும்...!

சரி... இவள் இப்படிச் சொன்னதும் சத்யேந்திரன், கூடுதல் சம்பளம் தானே உன் பிரச்சினை? என்னிடம் கேள். எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தருகிறேன்... என்று சொன்னாள் அதற்கு என்ன பதில் சொல்வது?

வாணி இப்படியொரு கேள்வி எழுப்பி பூரணி அம்மாளைப் பார்க்க அவள் அதற்கும் தயாராய் விடை வைத்திருந்தாள்.

அப்படி சத்யேந்திரன் கிடுக்கிப்பிடி போட்டால்... 'இல்லை சார்... ஒரே வேலையை செக்குமாடு போல் செய்து போரடித்துவிட்டது... வேறொரு கம்பெனியில் வித்தியாசமாய் வேறு ஒரு வித வேலையைச் செய்ய ஆசைப்படுகிறேன்...' என்று கூறி சமாளிக்க வேண்டும்!

எல்லாவற்றையும் முழுதாய் விளக்கி விட்டாள் பூரணி அம்மாள்.

அப்படியே வாயடைத்துதான் போனாள் வாணி.

இதற்குமேல் பூரணி அம்மாளிடம் எதையும் வாதிட முடியாது. எந்த சாக்கும் சொல்ல முடியாது என்பத வாணிக்கு புரிந்து போயிற்று.

அதற்குப் பின் பூரணி அம்மாளின் திட்டத்திற்கு அவள் சம்மதிப்பதைத் தவிர வேறு வழியும் இல்லை என்பது தெரிந்தாயிற்று.

ஆனால் ஒன்று. பூரணி அம்மாள் போன்ற ஆட்களை ஜென்மத்திலும் மறக்கமுடியாது போல் தோன்றிற்று.

கெஞ்சி, காலில் விழுந்தாவது தங்களது காரியத்தை சாதித்துக் கொள்வார்கள்.

ஆனால் இப்படி கெஞ்சி சாதிப்பதும் ஒரு வித கட்டளைதானே!

யோசித்தவள் மேற்கொண்டு எதுவும் தோன்றாதவளாய் இமைகள் விரிய விழிக்கத்தான் செய்தாள்.

அந்த விழிப்பு, மறுநாள் சத்யேந்தரன் முன் ராஜினாமா லெட்டரை நீட்டிவிட்டு அவள் நிற்கும் வரை தொடர்ந்தது.

சத்யேந்திரன் லெட்டரை வாங்கியவன், 'என்ன?' என்றான் பார்வையாலே.

"சார், இது என் ராஜினாமா கடிதம். நான் இந்த வேலையை விட்டு விலக விரும்புகிறேன்..." என்றாள் சுருக்கமாய் உணர்ச்சியற்ற குரலில்.

"என்ன... என்ன உளறுகிறாய்...?" என்றான். சத்யேந்திரன் சட்டென மாறிய முகபாவத்துடன்.

"உளறவில்லை சார். உண்மை. உண்மையைத்தான் சொல்கிறேன். நான் எனது வேலையை ராஜினாமா செய்கிறேன். தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்..."

கிளிப்பிள்ளைக்கு சொல்லக்கொடுத்து சொல்வது போல் தான் மனதில் கோர்த்து வைத்திருந்த வார்த்தைகளை படபடவென சொன்னாள்.

அவன் சத்யேந்திரன் அதிர்ச்சி பொங்க சீட்டை விட்டு எழுந்து விட்டான்.

"என்னவாயிற்று... உனக்கு...? திடீரென... ஏன் இப்படி உளறுகிறாய்?" என்றான் மறுபடியும் கோபம் குறையாதவனாய்.

"இல்லை சார். இது திடீரென எடுத்த முடிவு இல்லை. ரொம்ப நாளாய் என் மனதை அரித்துக் கொண்டிருந்த விஷயம். உங்களிடம் எப்படி சொல்வதென்று தயங்கிக் கொண்டிருந்தேன்..."

அவள் சொல்லி முடிக்க அவன் கைகளைத் தட்டியபடி,

"இப்போதுதான் அந்த தைரியம் வந்ததாக்கும். நல்ல தைரியசாலிதான்! வேலை கொடுத்த என்னிடமே முகத்திலடித்தாற்போல் ரிசைனிங் லெட்டரை நீட்டுகிறாய்...?" என்றவன் அதே கோபத்துடன் அவளை உற்றுப் பார்த்தான்.

"இதோ... பார்... வாணி; நீ வேலை பார்ப்பதும் பார்க்காததும் உன் இஷ்டம். ஆனால் நீ வேலையை விடுவதற்கான சரியான காரணத்தை என்னிடம் சொல்லியாக வேண்டும். இல்லாவிட்டால் உன் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளமாட்டேன்..."

தெளிவாய் கணீர்க்குரலில் அவன் பேசிய போது அவளும் அவனையே உற்றுப் பார்த்தாள். இவனிடம் சொல்ல முடியுமா?

எல்லாவற்றுக்கும் உன் தாய் தான் காரணம். உன்னைப் பார்க்க கூடாதாம். உன் முகத்திலேயே இனி விழிக்கக் கூடாதாம்! அதற்கு இந்த வேலையை விடுதல் ஒன்றுதான் வழி என்று!

"சார்... நான் சொல்வது உண்மையான காரணம்தான். எனக்கு இன்னொரு கம்பெனியில் நல்ல சம்பளத்தில் நல்ல வேலை கிடைத்திருக்கிறது..." என்றவள் பூரணி அம்மாள் சொல்லிக் கொடுத்த ஐடியாக்கள் ஞாபகம் வர, "அதாவது சார்... செக்கு மாடு போல் ஒரே வேலையைச் செய்து போரடித்துவிட்டது சார்... அதனாலே வேறு வேலையைத் தேடிச் செல்கிறேன். என்னை நம்புங்கள்." என்றாள் குரல் கம்ம.

அதற்கு மேல் அவளால் பேசமுடியவில்லை. பேசினால் கண்கள் கலங்கி அழுதாலும் அழுது விடுவாள். அப்படி அழக்கூடாது என்ற இறுமாப்புடன் அவள் உதட்டைக் கடித்து, சிரமத்துடன் உணர்ச்சிகளை அடக்கினாள்.

இம்முறை அவள் சொன்ன பதிலால் அவன் முக இறுக்கம் பெரிதும் தளர்ந்து பளீர் புன்னகை பிறந்தது.

"அட... செக்கு மாடு போல் இந்த வேலையும் நாங்களும் உங்களுக்கு



அலுத்துப் போய் விட்டோமோ?"

சொல்லியபடி அவள் பக்கம் வந்து அவளை மேலும் கீழும் பார்த்தவாறு சுற்றி வந்தான்.

அவள் உதட்டை அழுந்தக் கடித்தபடி உணர்ச்சிப் பிழம்பாய் நின்று கொண்டிருப்பதை உற்றுக் கவனித்தான்.

இரண்டு நிமிட அமைதிக்குப் பிறகு, "உன் ராஜினாமாவை ஏற்றுக் கொள்கிறேன்...!" என்றான். சலனமற்ற குரலில்...

✪✪✪

## 13

'சத்யேந்திரன் அதன் பிறகு எவ்வித உறுத்தலுமில்லாமல் விடுவித்து விட்டான். அவளது ராஜினாமாவிற்கு சம்மதம் என்று சொல்லிவிட்டான்.

வாணிக்கு ஒரே ஆச்சர்யம்! அவன் பெரிதாய் கத்துவான் ஆர்ப்பாட்டம் பண்ணுவான் என்று நினைத்தவளுக்கு அவன் சாதாரண விசாரிப்பு விசாரித்து விட்டு ராஜினாமாவை அனுமதித்தது பெரும் அதிர்ச்சியலையை பரப்பியது.

அவன் தலையசைப்புடன் சம்மதம் சொல்லிய பிறகும் அங்கேயே சிலை போல்தான் நின்று கொண்டிருந்தாள்.

பின் சத்யேந்திரன்தான் அவள் தோள்களைத்தட்டி, "உனது வேண்டுகோள் ஏற்கப்பட்டது. இந்த நொடியிலிருந்து நீ இந்தக் கம்பெனியின் எல்லா பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கப்படுகிறாய்... நீ போகலாம்...!" என்றபடி வாசல் பகுதியை நோக்கி கையையும் காட்டிவிட்டான்.

அதற்குமேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை.

விடுவிடுவென வெளியே வந்தாள்.

அடுத்து ஐந்து நிமிடத்தில் அலுவலக கேட்டிற்கு வெளியே தனியாளாய் நின்று கொண்டிருந்தாள் அவள். திரும்பி கம்பெனியின் பிரம்மாண்டமான கட்டிடத்தைப் பார்த்தாள்.

என்ன கொடுமை இது!

இவ்வளவு நாள் அவள் ஓடியாடி வேலை பார்த்த அலுவலகத்தை விட்டு அவள் தூக்கியெறியப்பட்டு விட்டாள். இல்லை... இல்லை... அவளே... தன் தலையில் குட்டியிருக்கிறாள்...

எவ்வளவு பெரிய இழப்பு...

அந்த சத்யேந்திரனும் அவளைத் தடுக்கவில்லையே!

சில கேள்விகள் கேட்டு விட்டு 'போ...' என தலையசைத்து விட்டானே...?

அவனுக்கு செகரட்டிரியாய் பின்னாலே சுற்றி வந்தவளுக்கு அவன் கொடுக்கும் மரியாதை இவ்வளவுதானா?

அவளை உரிமையுடன் கண்டித்திருக்கலாம். போகவே கூடாது

விடமாட்டேன் என்று தடுத்திருக்கலாம். ஆனால்... ஆனால்... அப்படிச் செய்யாமல் இருந்து விட்டானே?

ஏன்... எதனால்...?

திடும்மென அவளுக்கு பூரணி அம்மாள் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

வாணி சந்தேகப்படாதே... நீ தான் அவனது காதலி. அவன் விரும்பும் அழகிய முட்டாள்!

பூரணி அம்மாள் சொன்னதை நினைத்துப் பார்த்தவளுக்கு எரிச்சலாய் வந்தது.

அவள் காதலியா?

அவள் அழகிய முட்டாளா...?

இல்லை... இல்லவே... இல்லை. அவள் காதலி ஓடியாடி பல இடங்களுக்குச் சென்றது... அவன் முதன் முறையாய் தன் வீட்டுக்கு அவளை அழைத்துச் சென்றது... அவள் விரல்களை உரிமையாய்த் தொட்டு இறுக பிணைத்துக் கொண்டது... அலுவலகத்தில் வைத்து திடீரென அவளை அணைத்துப் பிடித்தது... எல்லாம்... எல்லாமே... அவள் ஞாபகத்திற்கு வந்து அவளை அவஸ்தை படுத்தியது.

நாளை முதல் அவள் சத்யேந்திரனைப் பார்க்கப் போவதில்லை. பார்க்கவும் முடியாது. இனி அவன் அருகாமையும் அவளுக்கு கிடைக்காது.

இனி... அவன் யாரோ...! அவள் யாரோ!

நினைத்துப் பார்க்கும் போதே துக்கம் நெஞ்சை அடைக்க கண்ணீர் விட்டு அழுதாள்.

தன்னையறியாமல் பிழியப் பிழிய அழுத போது அவள் மனது தவித்தது. அந்த தவிப்புடனே கேள்வியை எழுப்பியது.

கடவுளே! நாம் ஏன் இப்படி வருந்த வேண்டும்? பிழியப் பிழிய அழ வேண்டும்...?

எனக்கு என்னாயிற்று?

சத்யேந்திரன் இல்லாமல்... அவனைப் பார்க்காமல் அவளால் இருக்க முடியாதா? .

அப்படியானால்... அப்படியானால்...

அவளும் காதலிக்கிறாளா? சத்யேந்திரனை விரும்புகிறாளா?

கேள்வி அவளுள் பூதகாரமாய் எழும்ப இன்னொரு மனம் காட்டிக்கத்தலாய் குரல் கொடுத்தது.

✪✪✪

பூரணி அம்மாள் சொன்ன புதுகம்பெனியில் நுழைந்ததும் அவளுக்கு பலத்த வரவேற்புதான்!

கம்பெனியின் எம்.டி.யை அடுத்த நிமிடமே அவளுக்கு சந்திக்க அப்பாயிண்டமெண்ட் கொடுக்கப்பட்டது.

அவரை சந்தித்து சில அறிமுக கேள்விகளுக்குப் பதில் சொன்ன உடன்



உடனடியாய் அவள் கையில் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் கொடுக்கப்பட்டது.

பூரணி அம்மாள் சொன்னபடியே சீனியர் ஆபரேட்டர் பதவி. சம்பளம் இருமடங்கு! சும்மா சொல்லக்கூடாது. இந்த பூரணி அம்மாள் பலே கெட்டிக்காரர்கள்தான்.

மகனுக்குத் தெரியாமலேயே தன் சொந்த செல்வாக்கை பயன்படுத்தி இன்னொரு கம்பெனியில் சொன்னபடியே நல்ல வேலையும் வாங்கிக் கொடுத்து விட்டார்களே!

அதிசயிக்கப்பட்டு வாய் பிளக்கத்தான் செய்தாள் வாணி.

அன்று முதல் நாளானதால் பாதி நேரம் கம்பெனி பற்றி, அதன் விற்பனை விவரங்கள், கொள்முதல் என நிர்வாகம் பற்றிய அறிமுக விளக்கமே அவளுக்கு நடத்தப்பட்டது.

எல்லாவற்றையும் விளங்குகிறதோ இல்லையோ தலையாட்டியபடி தான் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் உடம்புதான் அங்கு இருந்ததே தவிர அவள் நினைவு முழுவதும் பழைய விஷயங்களையே நினைத்துக் கொண்டிருந்தது.

இந்நேரம் சத்யேந்திரன் அலுவலகம் வந்திருப்பான். இப்போது பள்ளிக்கூட பேரேடை பார்வையிட சென்றிருப்பான். இப்போது உற்பத்தி பிரிவை நோக்கி சென்று கொண்டிருப்பான். இப்போது அக்கவுண்டிங் செக்ஷனில் உட்கார்ந்து சூபர்வைஸ் செய்வான்... என அவன் வரிசையாய் செய்யும் ஒவ்வொரு விஷயம் பற்றியும் தவிப்பாய் நினைத்துக் கொண்டிருந்தாள் வாணி.

எல்லா நினைப்பும் அவளுள் பசுமையாய் எழுந்து வாட்டி வதைத்துக் கொண்டிருக்க... அதையெல்லாம் விட இனி சத்யேந்தரனை நாம் பார்க்கவே முடியாதா? என்ற நினைப்புதான் அவளை ரொம்பவும் தவிக்க வைத்து வேதனைப் படுத்தியது.

அதே நினைப்புடன் அன்று முழுவதும் புது அலுவலகத்தில் புது வேலையில் உட்கார்ந்திருந்தாள்.

யார் எது கேட்டாலும் வெறும் தலையசைப்புதான்...! தேவைப்பட்டால் சுருக்கமாய் ஒன்றிரு வார்த்தைகளில் பதில். அதற்குமேல் யாரையும் பார்க்கப் பிடிக்காமல் ரொம்ப நேரம் குனிந்தே இருந்தாள்.

ஒரு வழியாய் ஐந்து மணிக்கே அலுவலகம் முடிந்ததும், தப்பித்தோம் பிழைத்தோம் என முதல் ஆளாய் அலுவலத்தை விட்டு வெளியே ஓடி வந்து விட்டாள் அவள்.

அன்ற இரவும் சத்யேந்திரனின் நினைப்பில் அவளுக்கு தூக்கம் போயிற்கு.

✪✪✪

## 14

வாணிக்கு ஒரே அதிர்ச்சிதான்.

வேலை முடிந்து திரும்பியவள் முகம் கழுவி முன் ஹாலுக்கு வந்தபோது... எதிரே பூரணி அம்மாள். கூடவே அந்த கல்யாண புரோக்கர்!

பூரணி அம்மாள் அத்தை கோதை நாயகியைத் தேட உள்ளே சமையற்கட்டிலிருந்து பெரிய கும்பிடு போட்டவாறு ஓடிவந்தாள் அவள்.

எல்லோரும் அமர்ந்து பேசப் பேச வாணிக்கு விஷயம் புரிந்தது.

பூரணி அம்மாள் முன்பு அவனிடம் சொன்ன 'கல்யாண பேச்சை' மறக்கவில்லை. மறுபடியும் ஆரம்பித்து விட்டாள்.

வாணி கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம். நல்ல இடம் ஒன்று தரகர் மூலம் வந்திருக்கிறதாம். அவள் அப்படி திருமணம் செய்து கொண்டால்தான் சத்யேந்திரன் அவளை மறந்து... மஞ்சரியை மணப்பானாம். வாணியிடம் இருந்து இந்த ஒரு உதவியை மட்டும் அவள் எதிர்பார்க்கிறாளாம்!

பூரணி அம்மாள் எல்லாவற்றையும் கோதை நாயகியிடம் சொல்லிவிட்டு அவள் முகத்தைப் பார்க்க, அவள் திரும்பி வாணி முகத்தைப் பார்த்தாள்.

அதற்குள் பூரணி அம்மாள் கூட்டி வந்த கல்யாணத் தரகரும் தன் பங்கிற்கு, "அம்மா... பையன் நல்ல குடும்பத்தைச் சார்ந்தவன். ஷிப்பிங் கம்பெனி ஒன்றில் கௌரவமான வேலையில் இருக்கிறான். நல்ல வசதியான குடும்பத்தில் இருப்பதால்... சீர், நகை நட்டு என எதையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. மணப்பெண் கட்டிய புடவையுடன் வந்தால் போதும். புன்னகையே எங்களுக்கு பொன் நகை என்றெல்லாம் சொல்லிவிட்டார்கள். அதனால் நீங்கள் சம்மதம் மட்டும் சொன்னால் போதும். இந்த சம்பந்தத்தை நல்லபடியாக பேசி முடித்து விடலாம்..." என பெரிய லெக்சர் கொடுத்து நிறுத்த... எல்லோரும் வாணியின் முகத்தையே ஆர்வமாய் பார்க்க ஆரம்பித்தனர்.

மற்ற நேரமானால் பூரணி அம்மாளின் இந்த ஏற்பாட்டிற்கு முகத்திலடித்தாற்போல் எதையாவது அவள் கூறி விட முடியும். ஆனால் இப்போது அவளுக்கென்று அன்பு இல்லம் ஒன்றை நிறைய பொருட்செலவில் உருவாக்கி அவள் ஆசைப்பட்டது போல் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருக்கும் நேரத்தில் அப்படி எடுத்தெறிந்து அவர்களை பேசிவிட முடியாது.

"யோசித்துச் சொல்கிறேன்..." என்று அப்போதைக்குச் சொல்லி விஷயத்தைச் சமாளித்தாள் வாணி.

ஆனால் இந்த விஷயத்திலிருந்து முழுமையாய் தப்பிப்பது எப்படி என்றே அவள் சிந்தனை ஓடிற்று.

பூரணி அம்மாள் அவளிடம் மட்டுமில்லாமல் அத்தை கோதை நாயகியிடமும் விஷயத்தை தெளிவுபடுத்தி வாணியை எப்படியாவது சம்மதிக்க



வைக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தாள்.

வாணியின் நிலையும் இந்த திருமண விஷயத்தில் குழப்பமாகவே இருந்தது. முன்பு போல் பூரணி அம்மாள் வெறும் பேச்சோடு கேட்டிருந்தால்... முகத்திலடித்தாற்போல் ஒரேடியாய் மறுத்திருப்பாள்.

ஆனால் இப்போது பத்துலட்ச ருபாய் செலவில் அன்பு இல்லம் ஒன்றை ஏற்படுத்தி அதை பராமரிக்கும் முழு பொறுப்பையும் அவளிடம் ஒப்படைத்திருந்ததால்... அவளால் பூரணி அம்மாளின் கோரிக்கையை தட்டிக்கழிக்க முடிவில்லை.

மேலும் இப்போதைய சூழலில் அவள் எதிர்காலம் பற்றியோ, திருமணம் பற்றியோ எவ்வித யோசனைகளையும் செய்யவில்லை.

என்றாவது ஒரு நாள் இதுபற்றி யோசித்து முடிவெடுக்கத்தானே போகிறாய். அதை இப்போது செய்தால் என்ன? என்றுதான் பூரணி அம்மாள் பேச்சால் அவளை மடக்கினாள்.

அதை விட்டால் பூரணி அம்மாள் வேறு விதமாக குடைவாள். "உண்மையைச் சொல் வாணி... சத்யேந்திரன் விரும்பினாலும் நீ அவனை விரும்பப் போவதில்லைதானே? உனக்கு அவன் மேல் பிரியம் இல்லதானே?" என்பாள்.

இது போன்ற கேள்விகளுக்கு வாணி என்ன பதில் சொல்வாள்? அவளால் என்ன பதில்தான் சொல்லமுடியும்?

ஆனாலும் வாணியை விடாப்பிடியாக ஒரு சந்தேகம் விரட்டியது. அதையும் பூரணி அம்மாளிடமே கேட்டாள்.

"சரிதான்... நீங்கள் சொல்வது போல் வேறு ஒருவரை நான் கட்டிக்கொண்டால்... சத்யேந்திரன் மனம்மாறி விடுவாரா? மஞ்சரியை மணந்து கொள்ள சம்மதிப்பாரா?" என்றாள்.

அவளது கேள்விக்கு பூரணி அம்மாள பலமாய் தலையசைத்தாள். "கண்டிப்பாக அப்படி நடக்கும் வாணி. நீ இல்லை என்றதும், அவன் மனம் மாறிவிடுவான். அவன் விரும்புகிறானோ இல்லையோ... எனக்காக... என் பேச்சுக்காகவாது மஞ்சரியை கட்டிக்கொள்வான். நானும் சம்மதிக்க வைத்துவிடுவேன்...!"

இப்படிச் சொல்லும்போது அவள்... என்ன சொல்லுவாள்? காக்காய் உட்கார பனம்பழம் கண்டிப்பாக விழும் என்று நம்புபவர்களை என்ன சொல்வது?

மேலும் இது எல்லாவற்றுக்கும் சூத்ரதாரி போல் விளங்கும் சத்யேந்திரனை நினைத்து வெகுவாய் சினம் கொண்டாள். அவன்தானே இவை எல்லாவற்றுக்கும் காரணம்? செய்வதையெல்லாம் செய்துவிட்டு ஒன்றும் தெரியாதவன் போல் இருக்கிறானே! என தவித்தாள்.

ஆனால் பூரணி அம்மாள் தாமதிக்கவில்லை. வாணிக்கு வேக வேகமாய் ஏற்பாடுகளை செய்தாள்.

✪✪✪

## 15

இதோ... இன்று அவளுக்கு மணநாள்.

அதிகாலையிலே குளித்து முடித்து அலங்கரிக்கப்பட்டு மணமகள் கோலத்தில் அவள்.

செயற்கையாய் புன்னகையை ஓடவிட்டு சிரிக்க முயன்றாள். எவ்வித வருத்தமுமில்லாத போல் ஒரு பாவனையை வைத்துக் கொண்டாள்.

பூரணி அம்மாள் கூடவே நின்று மணப்பெண்ணின் தாயார் போல் அவளை கவனித்தது, நடமாடியது, அந்த நிலையிலும் அவளை நெகிழச் செய்தது.

குங்குமமாய் சிவந்த அழகோடு தலையை குனியவும் வைத்துக்கொண்டாள்.

யார்... யாரோ... பேசுவது... சிரிப்பது... நலம் விசாரிப்பது என விதவிதமான ஒலிகள். கல்யாண கலகலப்புகள் அவள் காதுகளில் விழுந்தன.

எதற்கும் சலனப்படாதவள் போல்தான் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

சத்யேந்திரனும் இங்கு வந்திருப்பான். தன்னை இந்த கோலத்தில் பார்த்துக் கொண்டிருப்பான் என்ற நினைப்பெல்லாம் அவளையறியாமல் உள்ளே ஓடிய போது... சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். அவளை மேலும் சிந்திக்க விடாதபடி முகூர்த்த வேளையும் நெருங்கியது.

சிறிது நொடிகளில் பக்கத்தில் மணமகன் வந்து உட்கார்ந்தான். மந்திரங்கள் முழங்கியது. கல்யாணச் சடங்குகள் தொடங்கியது.

அப்போதும் அவள் தலையை குனிய வைத்ததுதான் நிமிர்த்தவே இல்லை.

கெட்டி மேளம் கொட்டப்பட்டு சரியான முகூர்த்த நேரத்தில் மணமகன் அவள் கழுத்தில் தாலியை கட்டினான். மணமகன் அப்படி கழுத்தில் மூன்று முடிச்சு போது கூட அவள் தன் குனிந்த கோலத்தை மாற்றவில்லை. மணமகன் முகத்தை நிமிர்ந்து ஒருதரம் கூட பார்க்கவில்லை.

தற்செயலாய் திருமணத்தின் அடுத்த சடங்கிற்காக அவள் தலையை நிமிர்த்த வேண்டியிருந்தது.

அப்படி நிமிரும்போது... நிமிர்ந்து தற்செயலாய் மாப்பிள்ளையின் முகத்தைப் பார்த்தபோது அவளுக்கு அப்படியே தூக்கிவாரிப் போட்டது.

அங்கு மணமகனாய் உட்கார்ந்து அவளுக்கு தாலிகட்டியது சாட்சாத் சத்யேந்திரனேதான்!

வாணி அதிர்ந்து போய்விட்டாள்!

மணக்கோலத்தில் மணமகனாய் சத்யேந்திரன்!

ஆச்சரியமான அதிர்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டாள் அவள்.

கடவுளே! இங்கு என்னதான் நடக்கிறது? நடப்பதெல்லாம் நிஜமா?

நம்ப முடியாமல் மீண்டும் வாய் பிளக்க... அவள் தோள்களைத் தட்டி சிரித்தான் சத்யேந்திரன்.



"நம்பு! நடப்பதெல்லாம் நிஜம்தான்!" என்றான் கிசுகிசுப்பாய் அவளது காதுகளில்.

இருந்தாலும் வாணி ஜீரணிக்க முடியாதவளாய் நிமிர்ந்து சற்றுத் தள்ளியிருந்த பூரணி அம்மாளைப் பார்க்க... பெரிதாய் புன்னகைத்தாள் அவள்.

சத்யேந்திரன் மறுபடியும் அவள் தோள்களை இடித்தவன், "என்ன பார்க்கிறாய் வாணி? அம்மா உனக்கு வேறு மாப்பிள்ளையை வரன் பார்த்து ஏற்பாடு செய்திருந்தது உண்மைதான். ஆனால் கடைசி நேரத்தில் நமது தீவிரமான காதலை நான் அவர்களுக்கு புரிய வைத்தபோது அவர்கள் மனம்மாறி விட்டார்கள். நம் இருவரையும் சேர்த்து வைத்துவிட்டார்கள். உனக்கு ஒரு இன்ப அதிர்ச்சி கொடுக்கவே விஷயத்தை சஸ்பென்ஸாய் வைத்திருந்தோம்..."

விரிவாய் சொல்லி முடித்தான் பெருமிதப் பார்வையோடு.

பூரணி அம்மாளை நன்றிப் பார்வை பார்த்தவாறு, குங்குமமாய் சிவந்த முகத்துடன் வெட்கம் படர சத்யேந்திரனின் கரங்களை பற்றினாள் அவனது அன்பு மனைவி வாணி!.

சுபம்